Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

உள்ளே...
- வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு? - பக். 05
- நஞ்சாகும் தண்ணீர்ப் போத்தல்கள் - பக். 08
- சிங்கள மயமாகும் கன்னியா வெந்நீரூற்று - பக். 20

விலை : ரூபா 20.00

செய்தி - 41 ஜூலை 09-15, 2016 பக்கம் - 20

# கூட்டு எதிர்க்கட்சியின் தனிச்சிங்கள நிழல் மந்திரிசபை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி நிழல் மந்திரிசபை ஒன்றை அமைத்துள்ளது. மஹிந்தவைப் பிரதமராகக் கொண்ட இந்த நிழல் மந்திரிசபையில் சிறுபான்மை இனத்தவரான தமிழரும் முஸ்லிம்களும் உள்ளடக்கப்படவில்லை. 1983 ஆம் ஆண்டு Pan Sinhala ministry அமைத்து தமிழ் முஸ்லிம் மக்களுக்கு இடம் வழங்கப்படாமை குறிப்பிடத்தக்கது.

மஹிந்த - பிரதமர், பௌத்த சாசன, மத அலுவல்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சர், அவருடைய அண்ணன் சாமல் ராஜபக்ஷ - தேசிய நெடுஞ்சாலைகள் அமைச்சர். மகன் நாமல் - வெளிவிவகார அமைச்சர் என முக்கிய அமைச்சுகள் ராஜபக்ஷ குடும்பத்தின் வசம் உள்ளன.

02 இல்

## வடக்கில் அபிவிருத்தி செய்யப்படும் நான்கு துறைமுகங்கள்

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்களான யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மீன்பிடித்துறையை மீளக்கட்டியெழுப்புவதற்கான கருத்திட்டத்தை தயாரிப்பதற்கான தொழினுட்ப உதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி வடமாகாணத்திற்கான நிலைபேறான மீன்பிடித்துறை அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது. ஆசிய அபிவிருத்திவங்கியின் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 62 மில்லியன் நிதியுதவியுடன் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னெடுக்கப்படும்.

02 இல்


## அமைச்சர் சத்தியலிங்கத்தின் அட்டகாசத்தால் மக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)


வடமாகாண சுகாதார அமைச்சர் டாக்டர். சத்தியலிங்கத்தின் குடும்ப ஆட்சி அட்டகாசம் தங்க முடியவில்லை எனத் தெரியவருகிறது. அமைச்சரும் அவருடைய அந்தரங்க செயலாளராக இருக்கும் தம்பியும் ஊரை அடித்து உலையில் போடும் வேலையைச் செய்கிறார்கள். இவர்களின் அட்டகாசத்துக்கு கடைசியில் பலியானவர் மன்னாரைச் சேர்ந்த சேவையர் கிங்ஸ்ஸி குஷரூஸ் என்பவரே ஆகும்.

வவுனியா ஓமந்தையில் உள்ள இலக்கம் 220 கிராம சேவையாளர் பிரிவில் நாவல்குளம் என்னும் ஓர் கிராமம் உள்ளது. 1984 ஆம் ஆண்டு குஷரூஸ் கல் உடைக்கும் ஆலையை ஆரம்பித்தார். அதையடுத்து 1992 ஆம் ஆண்டு யுத்தம் உக்கிரமடைந்த போது கல் உடைக்கும் ஆலையின் வேலையை நிறுத்தினார்.

02 இல்



## கொத்தணிக் குண்டு விவகாரம் யார் கூறுவது உண்மை



(கொழும்பு)

வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கொத்தணிக்குண்டு பாவிக்கப்பட்டதாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையத் அல் ஹுசைன் தெரிவித்த குற்றச்சாட்டை விசாரணை செய்ய வேண்டும் எனக் கூறுவதில் எது வித நியாயமும் இல்லை என உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதியும் காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவருமான மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

மேலும் 2010 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கொத்தணிக்குண்டு பாவிக்கத் தடை செய்யப்பட்டது. கொத்தணிக் குண்டைத் தடை செய்யும் தீர்மானத்தில் அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா, சிரியா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகள் கைச்சாத்திடவில்லை என மக்ஸ்வெல் பரணகம சுட்டிக்காட்டினார். எனவே 2009 ஆம் ஆண்டு மேமாதம் 19 ஆம் திகதிக்கு முன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது கொத்தணிக் குண்டு பாவித்திருந்தால் அதைக் குற்றமாகக் கருதமுடியாது என்றார்.



### கொண்டோடிச் சுப்பர்



# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk


## இலங்கை மத்திய வங்கி விவகாரம் மழைவிட்டும் தூவானம் நிக்கவில்லை

சென்ற யூன் 30 துடன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜூண மகேந்திரனின் பதவிக்காலம் முடிவுக்கு வந்தது. அவர் மீண்டும் அந்த பதவியை தான் கோரவில்லை என்றும் தன்மீது சுமத்தப்பட்ட குற்றங்களில் இருந்து விடுபட்ட பின்னர் அந்த பதவி வகிப்பது பற்றி தீர்மானிப்பதாகவும் அறிவித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் 2015 ஜனவரி 8 ஆம் திகதி முடிவடைந்த பின்னர் சிங்கப்பூர்வாசியான அர்ஜூண மகேந்திரன் மத்திய வங்கி ஆளநராகப் பதவி ஏற்றார். இவர் இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்போட் பல்கலைகழகத்தில் உயர்பட்டம் படித்தவர். பிரபலமான பொருளாதார விற்பன்னர் ஆவார். ஏற்கனவே இலங்கை மத்திய வங்கியில் உயர் பதவி வகித்தவர். அவர் மீது திறைசேரி முறி ஊழல் சம்பந்தமாக எதிர்கட்சியினரும், ஆளும் சுதந்திர கட்சியினரும் குற்றம் சுமத்தினர். அதையடுத்து,

1. அந்த குற்றச்சாட்டை விசாரிப்பதற்கு மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. அந்த விசாரணைக் குழு அர்ஜூண மகேந்திரன் குற்றவாளி இல்லை என அறிவித்தது.

2. பொலிஸார் அர்ஜூண மகேந்திரனுக்கு எதிராக விசாரணை செய்தார்கள். இறுதியில் அவருக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கு எந்த வித ஆதாரமும் இல்லை எனக் கூறி அந்த விசாரணையை நிறுத்தினர்.

3. அதை அடுத்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். உச்ச நீதிமன்றமும் அர்ஜூண மகேந்திரன் குற்றவாளி இல்லை எனத் தீர்ப்பு வழங்கியது.

4. அதை அடுத்து பொது நிறுவனங்கள் குழு(கோப்) நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் விசாரணைக் குழு, விசாரணை செய்தது. அந்த விசாரணைக் குழு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை கூறியது. கணக்காய்வாளர் நாயகம் தனது விசாரணை அறிக்கைகளை வழங்கினார். திறைசேரி முறி ஊழல்கள் பிரகாரம் அரசாங்கம் 1.6 மில்லியன் ரூபா நஷ்டம் அடைந்துள்ளதாகவும் இந்த திறைசேரி முறி வியாபாரத்தினால் கிடைத்த நஷ்டத்திற்கு அர்ஜூண மகேந்திரன் பொறுப்பு எனக் கூறினார். கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அவரது அபிப்பிராயமே தவிர முடிந்த முடிவல்ல. இதைப் புரிந்து கொள்ள வேண்டும். கோப் குழுவின் விசாரணைக் குழுவின் அறிக்கை இன்றும் சபாநாயகருக்கு சமர்பிக்கவில்லை. எனவே அர்ஜூண மகேந்திரன் சட்டப்படி குற்றவாளி என யாராலும் கூறிவிட முடியாது.

நிலைமைகள் இவ்வாறு இருக்க திடீர் என்று இந்திரஜித் குமாரசாமி என்ற தமிழ் பொருளாதார விற்பன்னரை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக ஜனாதிபதி நியமித்துள்ளார். இது ஒரு தவறான முன் உதாரணம் என்று தான் கூறவேண்டும்.

அர்ஜூண மகேந்திரனின் பிரச்சினைக்கு முடிவு கண்ட பின்னர் தான் புதியதொரு ஆளுநரை நியமித்திருக்க வேண்டும்.

விரைவில் கோப் அறிக்கை வெளிவந்து அர்ஜூண மகேந்திரன் குற்றம் அற்றவர் என்று நிரூபிக்கப்பட்டால் அவர் மீண்டும் ஒரு முறை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமனம் பெறத் தகுதியுடையவர் ஆகிவிடுவார். அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் இலங்கை ஜனாதிபதி அவருடைய முகத்தை எங்கு சென்று மறைத்து வைப்பார்.

இங்கே நாங்கள் நியமனம் பெற்ற இந்திரஜித் குமாரசாமியை விமர்சிக்க முன் வரவில்லை. அவர் அர்ஜூண மகேந்திரனைப் போன்ற தகுதியுடையவர் தான். அதில் எந்த ஐயப்பாடும் கிடையாது. ஆனால் பத்திரிகைகளும் எதிர்க் கட்சியினரும் ஆளும் சுதந்திரக் கட்சியினரும் அர்ஜூண மகேந்திரன் மீது குற்றம் சுமத்தினர். முன்னாள் ஆளுநர் அர்ஜூண மகேந்திரன் குற்றவாளி இல்லை என நிரூபிக்கப்பட்டால் அவர்கள் தங்களுடைய முகத்தை எங்கே கொண்டு சென்று மறைப்பார்கள்.

அரசியல் என்பது ஒரு கழுதையை போன்று முன்னால் போனாலும் பின்னால் போனாலும் உதைக்கும். இது அரசியலில் ஒரு முக்கியமான காலகட்டம். நிலைமைகளை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். அர்ஜூண மகேந்திரன் குற்றவாளி இல்லை எனின் அவருக்கு உரிய இடம் வழங்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டும்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## கூட்டு எதிர்க் ...

**நிழல் மந்திரிசபையின் விபரம் :**

கல்வி - டலஸ் அழகபெரும, நிதி - பந்துல குணவர்தன, உள்ளூராட்சி, மாகாண சபை - ரஞ்சித் டி சொய்சா, துறைமுகங்கள் மற்றும் கப்பல் - குமார வெல்கம, தொழில் அமைச்சு - காமினி லொக்குகே, கிராமிய கைத்தொழில் - எஸ். எம். சந்திரசேன, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் - டினேஸ் குணவர்தன, போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து - சாமல் ராஜபக்ஷ, அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தகம் - பண்டார தென்னக்கோன், வீடமைப்பு, கட்டுமான மற்றும் பொறியியல் சேவைகள் - விமல் வீரவன்ச தேசிய ஒருமைப்பாட்டு, கூட்டுறவு - இருப்பு, நல்லிணக்க மற்றும் அரசகரும மொழிகள் - வாசு தேவ நாணயக்கார, சமூக வலுவூட்டல் மற்றும் சமூக சேவைகள் - பவித்திரா வன்னியாராச்சி, பெருந்தோட்ட மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு - சலிந்த திசநாயக்க, நீர்ப்பாசன, நீர் வள மேலாண்மை - சி.பி. ரட்ணாயக்க, விவசாயம் - அபேவர்தன, தொழில் மற்றும் தொழில் உறவுகள் - காமினி லொக்குகே, மாநில முயற்சி அபிவிருத்தி - கெஹெலிய ரம்புக்வெல, கைத்தொழில் மற்றும் வர்த்தகம் - ஜோன்சன் பெர்னாண்டோ, நீதி மற்றும் அரசியலமைப்பு விவகாரம் - சந்திரசிறி கஜதீர, கிராமிய பொருளாதார விவகாரங்களுக்கான, கால்நடை மற்றும் ரஜரட்ட அபிவிருத்தி - எஸ் எம். சந்திரசேன, பெட்ரோலியம் மற்றும் பெற்றோலிய வளங்கள் - மஹிந்தானந்த அளுத்கமே, மின் வலு - எரிசக்திரோகித அபய வர்தன, அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் - வீரகுமார திசாநாயக, தபால் சேவைகள் - பி.சி. முத்துகுமாரன, காணி, கிழக்கு அபிவிருத்தி - விமலவீர திசநாயக்க, மெகாபொலிஸின் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி - ஜெயந்த சமரவீர, அனர்த்த முகாமைத் துவம் - பத்ம உதய சந்த குணசேகர, சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவத்துறை - டொக்டர் ரமேஷ் பத்திரன, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி - ரஞ்சித் சொய்ஸா, திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி - விதுர விக்கிரமநாயக்க, நகர கட்டமைப்பு மற்றும் குடிநீர் வழங்கல் லொஹான் ரத்வத்த, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் மகாவலி அபிவிருத்தி - ரொஷான் ரணசிங்க, நிலையான அபிவிருத்தி மற்றும் வனவிலங்கு - விஜித பெருகொட, தொலைத் தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு - கனக ஹேரத், பொது நிர்வாகம் மற்றும் மேலாண்மை - ஜானக வக்கும்புர, வெகுஜன ஊடகம் - டிலும் அமுனுகம, உயர் கல்வி - ஷெகான் சமரசிங்க, மகளிர் மற்றும் குழந்தைகள் விவகாரம் - சிரியானி விஜயவிக்கிரம, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு - பி.டி. சில்வா, புதிய கிராமங்கள் மற்றும் உட்கட்டமைப்பு - தேனுகா விதானகமகே, நெடுஞ்சாலைகள் - பிரசன்ன ரணதுங்க, சட்டம் மற்றும் ஒழுங்கு - உதய கம்மன்பில, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் - சனத் நிஷாந்த, சுற்றுலா - தாரக பாலசூரிய, உள் நாட்டலுவல்கள் - சிசிர ஜெயக்கொடி.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## வடக்கில் ...

இத்திட்டத்தின் நோக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை மற்றும் குருநகர் மீன்பிடி துறைமுகங்களையும் மன்னார் மாவட்டத்தில் பேசாலை மீன்பிடித் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வதாகும் என சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

**பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகம்**

சாத்தியவள ஆய்வுகள், பருத்தித்துறை துறைமுகத்தினை மீன்பிடி நடவடிக்கைகளுக்கு உகந்த நிலைபேறான இடமாக அடையாளம் கண்டுள்ளதுடன் உத்தேச திட்டமானது அத்துறைமுகத்தின் படுக்கையை (Habour basin) 12 ஹெக்டேயர்களாகவும் 5 மீற்றர் ஆழம் கொண்டதாகவும் அமைப்பதுடன் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் படகுகளின் செயற்பாடுகளை வசதிப்படுத்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

இதன் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூபா 6 பில்லியன்களாகும். இது அலை தாங்கி (breakwater), கப்பல்துறை சுவர் (Quay wall), ஏலம் விடப்படும் அறை (Auction hall), குளிரூட்டும் அறைகள் (cool room) மற்றும் குளிரூட்டிகள் (Ice plant), ஆழமாக்கும் வசதிகள் (dredging facilities) மற்றும் படகுகள் திருத்தும் வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

பலநாட்கள் கடலில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடக்கூடிய படகுகள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதை இது வசதிப்படுத்தும்.

**குருநகர் மீன்பிடித் துறைமுகம்**

யாழ் மாவட்டத்திலுள்ள குருநகர் மீன்பிடி துறைமுகமானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடனான உத்தேச கருத் திட்டத்தின் கீழ் 2.5 மீற்றர்களுக்கு ஆழப்படுத்தப்படும்.

இதன் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூபா 4.8 பில்லியன்களாகும்.

இது அலைதாங்கி (breakwater), கப்பல்துறை சுவர் (Quay wall), ஏலம் விடப்படும் அறை (Auction hall), குளிரூட்டும் அறைகள் (cool room) மற்றும் குளிரூட்டிகள் (Ice plant), ஆழமாக்கும் வசதிகள் (dredging facilities) மற்றும் படகுகள் திருத்தும் வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

ஆழமற்ற நீர் தொடர்பான வரையறை காணப்பட்ட போதிலும் உத்தேச திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் வசதிகள், பல நாட்கள் கடலில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடக்கூடிய படகுகள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதை வசதிப்படுத்தும்.

**பேசாலை மீன்பிடித் துறைமுகம்**

மூன்றாவதாக மன்னார் மாவட்டத்தில் பேசாலையில் உள்ள மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும்.

தற்போது இத்துறைமுகம் ஆழமற்றதாகவும் ஒரு நாள் மீன்பிடி படகுகளின் செயற்பாடுகளை வசதிப் படுத்துவதாகவும் கரையோர வசதிகள் அற்றதாகவும் காணப்படுகின்றது.

(தொடர்ச்சி 3 இல்)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## அமைச்சர் ...


அமைச்சர் சத்தியலிங்கத்தின் தூண்டுதலால் கல் உடைக்கும் ஆலையை உடனடியாக மூடும்படி வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உத்தரவிட்டது. நாவல்குளம் கல் உடைக்கும் ஆலையை உடனடியாக நிறுத்துமாறு 12.06.2016 ஆம் திகதி கடித மூலம் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை செயலர் திருமதி சுகந்தி கிஷோர் உத்தரவிட்டார்.

பிரதேச சபையின் கடிதம் கிடைத்ததும் அமைச்சர் சத்தியலிங்கத்தை சந்தித்து இது பற்றி குஷரூஸ் வினவினார். கல் குவாரியை நிறுத்தும் அதிகாரம் 'எனக்கு இல்லை. பிரதேச சபை செயலாளரிடம் போய் கேட்கவும்," என்று அமைச்சர் கூறினார். அமைச்சரின் ஆலோசனையின் பேரில் பிரதேச சபைச் செயலரைச் சந்தித்த குஷரூஸ் தனது கல் குவாரியின் வேலை இடை நிறுத்தப்பட்டதற்கான காரணத்தைக் கேட்டார். அமைச்சர் கூறித் தான் கடிதம் அனுப்பப்பட்டதாக குஷரூஸ்க்கு பதிலளிக்கப்பட்டது.

பிரதேச சபைச் செயலரின் பதிலைக் கேட்ட குஷரூஸ், தான் அமைச்சரைச் சந்தித்ததாகவும் தனக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என அவர் கூறியதாகவும் தெரிவித்தார். குஷரூஸின் முன்னிலையில் அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட பிரதேச செயலர் திருமதி சுகந்தி கிஷோர் 'அமைச்சரே நீங்கள் எனக்கு பணிப்புரை தந்தபடியால் தானே கல் குவா ரியை நிற்பாட்டினேன் எனக் கூறியதாகத் தெரியவருகிறது. வட மாகாணசபையில் உள்ள நான்கு அமைச்சர்களையும் மாற்ற வேண்டும் என ஏற்கனவே 15 வட மாகாணசபை உறுப்பினர்கள் கையெழுத்திட்டு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் கடிதம் அனுப்பி உள்ளார்கள்.

ஓமந்தையில் உள்ள நாவல் குளம், மருதங்குளம், அலைகல்லு போட்ட குளம், மாளிகை ஆகிய இடங்கலைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டம் கிடைத்துள்ளது. அவர்கள் தமது வீட்டுத் தேவைக்கான கல், கருங்கல் என்பனவற்றை குஷரூஸின் குவாரியிலிருந்தே பெறவேண்டும். கல் குவாரியின் வேலை இடை நிறுத்தப்பட்டுள்ளதால் வீடு கட்டுவதற்குரிய பொருட்களை வாங்க முடியாது அவர்கள் திண்டாடுகிறார்கள். கல் குவாரியின் வேலை முடக்கப்பட்டதற்கு அமைச்சர் சத்தியலிங்கம் காரணம் என் பதனால் அவருக்கு எதிராக போராட்டம், உண்ணா விரதம் என்பனவற்றைச் முன்னெடுப்பதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் திட்டமிடுவதாக தினச்செய்திக்குத் தெரிய வருகிறது.

# ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் நிகழ்ச்சிகள் ரத்து



(ரஷ்யா)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தொடர்ந்து தனது கூட்டங்கள் மற்றும் சந்திப்புகளை ரத்து செய்து வருகிறார். கடந்த ஜூலை 1 ஆம் திகதி முதல் பொது நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்காததால் சர்வதேச அளவில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு அவ்வப்போது குடைச்சல் கொடுத்து வருபவர் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின். உலகின் மிகப்பெரிய நாடுகளில் ஒன்று என்பதாலும், அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டாலும், புடினை சர்வதேச ஊடகங்கள் தொடர்ந்து கண்காணித்தபடி உள்ளன. புடினின் ஒவ்வொரு நடவடிக்கையையும் உலக ஊடகங்கள் செய்தியாக்கிக் கொண்டுள்ளன. அப்படிப்பட்ட நபர் திடீரென மாயமானால் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காதல்லவா.

விளாடிமிர் புடின் கடைசியாக பின்லாந்தில் நடந்த மாநாட்டில் கலந்து கொண்டார். ஜூலை 1 ஆம் தேதிக்கு பிறகு புடினை எந்த ஒரு பொது நிகழ்ச்சியிலும் பார்க்க முடியவில்லை.

கடந்த 5 ஆம் திகதி சுற்றுலாத் துறையுடன் தான் மேற்கொள்ள இருந்த சந்திப்பை தேதி குறிப்பிடாமல் புடின் ஒத்தி வைத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற நான்காவது சர்வதேச விளையாட்டு போட்டிகளில் புடின் பங்கேற்பதாக இருந்தது. ஆனால் அதிலும் கடைசி நேரத்தில் புடின் பங்கேற்கவில்லை. இரும்பு மற்றும் சுரங்க நிறுவனத்தை புடின் சுற்றி பார்ப்பதாக இருந்தது. அந்த நிகழ்ச்சியும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ரஷ்ய ஊடகங்கள், புடினின் உதவியாளரை தொடர்பு கொண்டு கேட்கையில், "விளாடிமிர் சர்வ தேச அளவிலான வர்த்தக சுற்றுலா பயணம் மேற்கொண்டுள்ளார்" என்று தெரிவித்துள்ளார். திங்கட்கிழமை அவர் உலகின் பார்வைக்கு வெளிப்படுவார் என்றும் ரஷ்ய அதிகாரிகள் தரப்பு கூறுகிறது.

புடின் திடீரென மாயமாகியுள்ளது குறித்து பல்வேறு கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகின்றன. அமெரிக்காவுக்கு எதிராக போர் தொடங்க இரகசிய ஆலோசனை செய்வதாக வதந்திகள் பரவுகின்றன.

## ஹற்றனில் கவனயீர்ப்பு போராட்டம்

(க.கிஷாந்தன்)

பெருந்தோட்டதொழிலாளிகளின்காணி உரிமைகளை வென்றெடுப்போம் என்ற தொனிப்பொருளின் கீழ் ஹற்றன் நகரில் 03.07.2016 அன்று மதியம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பெருந்தோட்ட சமூக காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் இணைப்பாளர் எஸ்.டி. கணேசலிங்கம் அவரின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பேரணியாக பதாதைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பியவாறு ஹற்றன் நகர சபை மண்டபத்திலிருந்து ஹற்றன் பஸ் தரிப்பிடம் வரை சென்று மீண்டும் நகர சபை மண்டபம் வரை சென்றடைந்தது.

அத்தோடு200வருடகாலமாகவாழ்ந்து வரும் மலையக மக்களுக்கு வீடு மற்றும் 20 பேர்ச் காணி உரிமையும் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## முச்சக்கரவண்டி விபத்து மூவர் படுங்காயம்

(க.கிஷாந்தன்)

நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை பகுதியை நோக்கி சென்ற முச்சக்கரவண்டி ஒன்று 05.07.2016 அன்று மாலை 4.20 மணியளவில் நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியில் ரதெல்ல குறுக்கு பாதையில் கார்லபேக் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலந்த காயங்களுக்குள்ளான முச்சக்கரவண்டி சாரதியும், அதில் பயணித்த இரு பெண்களும் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டியில் ஏற்பட்ட இயந்திர கோளாறே விபத்து ஏற்பட காரணம் என கண்டறியப்பட்டுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர் பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹற்றனில் ஊடக பாசறை

(க.கிஷாந்தன்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டிலும், இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ரிவிர செய்தித்தால் ஆகியவற்றின் ஊடக அனுசரணையுடனும் நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் பாடசாலை மாணவர்களின் ஊடக மற்றும் தொலைத் தொடர்புத்துறை சார் அறிவினை பாடசாலை மட்டத்திலிருந்து விருத்தி செய்யும் நோக்கில் ஊடக பாசறை வேலைத்திட்டம் நாடு பூராகவும் நடாத்தப்பட்டு வருகின்றது.

நாடபூராக தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலும் நடாத்தப்பட்டு வருகின்றது. அந்தவகையில் இவ்வேலை திட்டத்தின் தமிழ் மொழி மூலமான முதலாவது வேலைத்திட்டம் நுவரெலியா மாவட்டத்தின் அட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்காக எதிர்வரும் 07.07.2016 அன்று ஹட்டன் நகர சபை மண்டபத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இவ் ஊடக பயிற்சி வேலைத்திட்டத்தில் "தொலைதொடர்பு ஊடகங்களில் தமிழ் மொழிப்பிரயோகம்" மற்றும் "அறிவிப்புத் துறை" ஆகிய துறைசார் விரிவுறைகள் நிகழ்த்தப்படவுள்ளதும் குறிப்பிடதக்கது.

இலங்கையின் புகழ் பெற்ற ஊடகவியலாளர் மற்றும் அறிவிப்பாளர்களான சீத்தாராமன், கே.நாகபூசணி ஆகியோர்களின் விரிவுரைகளும் நிகழ்த்தப்படவுள்ளன.

அதனை தொடர்ந்து இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடக பிரிவு அறிவிப்பாளர். சிவராஜாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# மோடியை பின்னுக்கு தள்ளிய சுஷ்மா

(டில்லி)

வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பரிசுச் பொருட்கள் பெறுவதில் முதல் இடத்தில் உள்ளார். பிரதமர் மோடி வெளிநாடுகளுக்கு அதிக அளவு சுற்றுப்பயணம் மேற்கொண்டாலும் அவர் குவிந்த பரிசு பொருட்களின் எண்ணிக்கை சுஷ்மா சுவராஜ் அவர்களை ஒப்பிடும் போது குறைவு தான்.

மோடியின் வெளிநாடு சுற்றுப்பயணம் தான் அதிகம். ஆனால் அவருக்கு கொடுக்கப்பட்ட பரிசு பொருட்கள் குறைவு தான். சுஷ்மா 27 பரிசு பொருட்கள் பெற்று முதல் இடத்திலும், மோடி 25 பெற்று இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.



இந்த அரசியல்வாதிகள் எதில் எல்லாம் பெருமை சேர்த்து கொள்கின்றனர். நல்ல அரசியல்வாதி என்ற பெயரை தவிர்த்து மற்ற அனைத்தையும் பெறுவதில் மிகவும் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

# பெண்ணின் தங்கச் சங்கிலி அறுப்பு

(க.கிஷாந்தன்)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் பெண்ணொருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற நபர் ஒருவரை திம்புள்ள பத்தனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

30 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியே இவ்வாறு அறுத்து செல்லப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் பிரதேசவாசிகள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் சந்தேக நபரான தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற நபரை அப்பகுதியில் வைத்து மடக்கி பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# அமைச்சர்...

பலநாட்கள் கடலில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடக் கூடிய படகுகள் ஆழ்கடல் மீன் பிடியில் ஈடுபடுவதை வசதிப்படுத்தும் நோக்கில், உத்தேச கருத் திட்டத்தின் கீழ் இத்துறை முகமானது 2.5 மீற்றர்களுக்கு ஆழப்படுத்தப்படும்.

நங்கூரமிடும் மின்பிடித் தளங் கள் (Fishery Anchorages)

தற்போது வடமாகாணத்தில், வடக்கு கிழக்கு பருவமழையின் போது போதியளவு தங்குமிட வசதிகள் காணப்படாமை, அணுகல் மற்றும் நங்கூரமிடுவதற்கு போதுமான ஆழம் காணப்படாமை, தரையிறங்குவதற்கு போதிய இடமின்மை மற்றும் கரையோர வசதிகள் காணப்படாமை என்பன மீன் பிடித்தலுக்கு தடையாக உள்ளதுடன் படகுகள் ஆழமற்ற நீரிலேயே நங்கூரமிடுகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடனான உத்தேச கருத்திட்டமானது அலை தாங்கி, துறைமுக படுக்கையை ஆழமாக்கல், அணுகல் கால்வாய்களை அமைத்தல் மற்றும்கரையோரவசதிகளைமேம்படுத்தல் என்பவற்றினூடாக நங்கூரமிடும் தளங்களை விருத்தி செய்தலை இலக்காகக் கொண்டுள்ளது. பன்னிரண்டு நங்கூரமிடும் தளங்களை மேம்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாதகல், முனை, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி, தொண்டமானாறு, மண்டைதீவு, நெடுந்தீவிலுள்ள தாளதுறை ஆகிய தளங்கள் யாழ் மாவட்டத்திலும், பன்னகட்டி கொட்டு தளம் மன்னார் மாவட்டத்திலும் பள்ளிகுடா, நாச்சி குடா மற்றும் வாழைக்காடு தளங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலும் விருத்தி செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**கரையிறங்கும் மீன்பிடி தளங்களை அபிவிருத்தி செய்தல்**

மேலும் யாழ்ப்பாணம், முல்லைத் தீவு, மன்னார் மற்றும் கிளி நொச்சி மாவட்டங்களில் அதிகளவான கரையிறங்கும் மீன்பிடி தளங்களை பிரதானமாக கரையோர வசதிகளை அபிவிருத்திசெய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

இதன் கீழ் சம்போடை, காக்கை தீவு, அராலித்துறை, சக்கோடை, சேந்தன்குளம், புங்குடுதீவு, கொழும்புத்துறை மற்றும் சுள்ளிபுரம் ஆகிய கரையிறங்கும் மீன் பிடித் தளங்களை யாழ் மாவட்டத்திலும் ஏனைய பலதளங்களை முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் இத்திட்டமானது நீரியல்வள அபிவிருத்தியையும் குறிப்பாக உவர்நீர் நீரியல்வள மரபு அல்லாத வாழ்வாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதையும் இலக்காக கொண்டுள்ளது.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி: மத்திய வங்கியின் ஆளுநராக மீண்டும் ஒரு தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மீதும் குற்றம் கூறுவார்களா?**

**ம. அகிலன் வெள்ளவத்தை.**

பதில்: அவர் தமிழர் என்பதனால் குற்றம் சுமத்துவார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி: அமைச்சர் சரத் பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துவிட்டார். அவருடைய கட்சி கலைக்கப்படவில்லை. கட்சியின் தலைவியாக மனைவி பொறுப்பேற்கப் போகிறாராம். இது என்ன வகையான அரசியல்?**

**எம். ராமதாஸ், திருகோணமலை.**

பதில்: இதுதான் புதிய வகையான அரசியல்.

**கேள்வி: இலங்கைக் கடலில் மீன் பிடிக்க இந்திய மீனவர்களுக்கு பொமிற் வழங்க இலக்கை அரசு உத்தேசித்துள்ளதாம். இது சாத்தியமா?**

**கி. குமார், பருத்தித்துறை.**

பதில்: இதனை தமிழர்கள் எதிர்க்க வேண்டும். இது தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும். இதனை ஒரு போதும் ஏற்க முடியாது.

**கேள்வி: நல்லாட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முறுகலாம். இது உண்மையா? வதந்தியா?**

**சி. வசந்தி, வவுனியா.**

பதில்: ஆரம்பத்தில் இருந்தே இதே நிலைதான். இரு தரப்பும் மூடி மறைத்தால் அது பூதாகரமாக வெடித்துவிடும். அந்த நாளைத்தான் சிலர் எதிர்பார்க்கிறார்கள்.

**கேள்வி: புனித ரமலான் காலத்திலும் தீவிரவாதிகள் தமது கைவரிசையைக் காட்டுகிறார்களே?**

**க. வாகீசன், மன்னார்.**

பதில்: அல்லாஹு அக்பர்.

**கேள்வி: காதலிக்க மறுக்கும் பெண்களை கொலை செய்யும் கொடூரம் என்று மறையும்?**

**த. புவிதரன், மாதகல்.**

பதில்: காதலிக்க மறுக்கும் ஆண்களைக் கொலை செய்யும் பெண்களும் இந்த உலகில் தான் இருக்கிறார்கள் என்பதை நண்பர் அறியவில்லைப் போலும்.

**கேள்வி: வைத்தியர்கள் வேலை நிறுத்தம், தனியார் பஸ் வேலை நிறுத்தம். நாடு எங்கே போகிறது?**

**சி. ராகினி, விசுவமடு.**

பதில்: நானும் அதைத்தான் கேட்கிறேன்.

**கேள்வி: கபாலி என்னும் மாயையில் ரஜினி விழுந்து விட்டாரா?**

**கு. ராகவன், சாகவச்சேரி.**

பதில்: ரஜினிக்கு வயது போய்விட்டது. மாறாட்ட குணம் வந்துவிட்டது என நினைக்கிறேன்.

**அரசியல், சினிமா,**
**விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.**
*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*
**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*

# பிளாஸ்டிக் சாபம் அல்ல... வரம்!



பிளாஸ்டிக் பைகளை நாம் அனைவரும் ஒரு சாபமாகக் கருதி வரும் நிலையில், மஹாராஷ்ட்ரா மாநிலத்தில், வால்னி என்னும் கிராமவாசிகளுக்கு அது வரமாக மாறியிருக்கிறது. ஆம், பிளாஸ்டிக் பைகளை ஒரு வரமாகக் கருதுகின்றனர் அந்த கிராம மக்கள். அங்கு குளம் குட்டைகளில் தேங்கும் நீர் விரைவில் மண்ணில் வடிந்து நிலத்தடிக்குச் சென்று விடுவதால் மழைநீரைச் சேமிக்க முடியாமல் அவர்கள் பல வருடங்களாக தண்ணீர் பிரச்சினையை சந்தித்து வந்தனர்.

நாக்பூரில் இருந்து 20 கி.மீ. தொலைவிலுள்ள இக்கிராமத்தில், ஏறத்தாழ 30 நீர்நிலைகள் உள்ளன. ஆனால், அங்கு நீரைச் சேமிக்க முடிவதில்லை. அங்குள்ள மாநில அரசு, Shet Tale Yojana என்னும் திட்டத்தின்படி, பிளாஸ்டிக் ஷீட்களை மானிய விலையில் அளித்து, அந்த குளங்களுக்கு அடிப்பகுதியில் போடும்படி அறிவுறுத்தியது. ஆனால், அந்த ஷீட்களின் விலை அதிகம் என்பதால், கிராமத்து மக்கள் அதை உபயோகிக்க முடியவில்லை. அதனால், இதற்கு ஒருதீர்வை அவர்களே கண்டுபிடித்தனர்.

பயன்படுத்தப்பட்டு, தூக்கி வீசி எறியப்பட்ட பிளாஸ்டிக் பைகளை ஒவ்வொரு ஞாயிறு அன்றும் சேகரித்து, வீட்டுப் பெண்களிடம் கொடுப்பார்கள். அவர்கள் அதைத் தைத்து, பெரிய ஷீட் போல மாற்றி விடுவார்கள். பிறகு அதை குளத்தின் அடியில் விரித்து, அதன்மேல் ஒரு அடிக்கு மண்ணைப் போட்டு விடுவார்கள்.

இதன்மூலம், மழைக்குப் பின்னர் ஏப்ரல் மற்றும் மே மாதம் வரை நீரை சேமிக்க முடிகிறது. இத்திட்டம் வெற்றி அடைந்ததைக் கண்டு, பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவர்களும் தற்போது இதைப் பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள். இதன் மூலம், இரண்டு பயன்கள்.

பிளாஸ்டிக் பைகளை எரித்து, அதனால் உருவாகும் மாசினை தடுக்க முடிகிறது. அதுமட்டுமின்றி, பைகள் எந்த விதத்திலும் குப்பைகளாகச் சென்றடையாமல் பயன்படுகின்றன. நீரை பல மாதங்கள் சேமிக்க முடிகிறது. இதனால், வால்னி கிராம மக்கள் தண்ணீர் பஞ்சம் ஏற்படாமல் வாழ்கின்றனர்.

இந்தியா மட்டுமல்லாமல் உலகிலேயே, பிளாஸ்டிக் பைகள் மிகப் பெரிய அபாயமாக மாறி விட்டன. பிளாஸ்டிக்கை புதைக்க முடியாது, காரணம் மக்காது. எரிக்க முடியாது, காரணம் காற்று மாசுபடும். நீர்நிலைகளில் போட முடியாது. காரணம் நீர்வாழ் உயிர்களுக்கு ஆபத்து.

ஆனால், மறுபுறம் இப்படி பிளாஸ்டிக்கை உபயோகமாக பயன்படுத்தவும் வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. இதைக் கண்டறிந்து நாம் செயல்பட்டாலே, பிளாஸ்டிக் குப்பைகளை இயற்கைக்கு பங்கமில்லாமல் மறுசுழற்சி செய்து பயன்படுத்தலாம்.

# எந்த மொழியிலும் பதிவிடலாம்

உலகம் முழுக்க கோடிக்கணக்கான மக்கள் பயன்படுத்தி வரும் ஃபேஸ்புக் தளத்தில் மொழி தெரியாதவர்கள் கூட இனி நமது பதிவை படித்து தெரிந்து கொள்ளும் வசதியை ஃபேஸ்புக் நிறுவனம் ஏற்படுத்தவுள்ளது. மொழி தெரியாத வர்களிடம் இருந்து வரும் ஃப்ரெண்ட் ரிக்வெஸ்ட்களை பொதுவாக ஏற்பதில்லை. அதனை ரிஜெக்ட் செய்து விடுவதும் உண்டு. மொழிகளால் இருந்த அந்த தடையை உடைக்கும் வகையில் ஃபேஸ்புக்கில் பன்மொழி கம்போஸ் டூல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இனி தமிழில் ஒரு போஸ்ட் பதிவிடப்பட்டால்,அந்த டூலை பயன்படுத்தி தங்களுடைய நண்பர் எந்த மொழி தெரிந்தவராக இருந்தாலும் வெளியிட முடியும். அவருக்காக ஸ்டேட்டஸ் பதிவிட முடியும்.

முதல்கட்டமாக உலகில் அதிகமாக வழக்கத்தில் உள்ள 45 மொழிகளில் இந்த டூலை பேஸ்புக் அறிமுகப்படுத்துகிறது. ஆனால் நிச்சயமாக தமிழ் அதில் இடம் பெற வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது.

மொழி தெரியாதவர்களிடம் பழக வேண்டியதில் இருக்கும் தர்மச்சங்கடங்களை ஃபேஸ்புக்கின் இந்த புதிய முயற்சி போக்கிவிடும்.

# இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களில் முதல் ஐ.ஏ.எஸ்.

இந்தியாவில் முதன்முறையாக இலங்கைத் தமிழர் ஒருவர், ஐஏஎஸ் இல் தேர்வாகி தற்போது கோழிக்கோடு மாவட்ட துணை ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளார்.



நீலகிரி மாவட்டம், கூடலூர் அருகேயுள்ள படகரா கிராமத்தைச் சேர்ந்தவர் இன்பசேகர் காளிமுத்து. இவரின் முன்னோர், கடந்த 1823 ஆம் ஆண்டு இலங்கைக்குக் குடிபெயர்ந்தனர். ஆங்கிலேயர்கள், இலங்கையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் வேலைக்கு தமிழகத்தில் இருந்து ஏராளமானோரை அழைத்துச் சென்றனர். அதில் இன்பசேகர் காளிமுத்துவின் முன்னோர்களும் அடங்கியிருந்தனர்.

கடந்த 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பிறகு, இலங்கை அரசு இந்தியாவில் இருந்து அங்கு குடியேறியவர்களின் குடியுரிமையைப் பறித்து திருப்பி அனுப்ப தொடங்கியது. அங்கிருந்து லட்சக்கணக்கானோர் தாயகம் திரும்பினர்.

இன்பசேகரனின் குடும்பமும் மீண்டும் தாயகம் திரும்பியது. பிழைப்புக்காக கொடைக் கானல், ஏற்காடு என பல மலைக் கிராமங்களில் வேலை வாய்ப்பினைத் தேடி அலைந்தனர். இறுதியாக நீலகிரி மாவட்டம் படகராவுக்கு வந்து குடியேறினர் இன்பசேகரனின் பெற்றோர். கூடலூர் பகுதியிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் கூலி வேலைபார்த்து, வாழ்க்கையை ஓட்டினர்.

தொடக்கக்கல்வியை பந்தலூரில் உள்ள அரச பள்ளியில் இன்பசேகரன் படித்தார். தினமும் பல கிலோ மீட்டர் தொலைவு நடந்துதான் பள்ளிக்குச் செல்வார். அடர்ந்த வனப்பகுதியில், தினமும் 2 மணி நேர நடைக்கு பிறகுதான் பள்ளிக்கே செல்ல முடியும். யானை, சிறுத்தைப் புலி எல்லாம் சர்வ சாதாரணமாகக் கடந்து செல்லும் பகுதி அது.

கடுமையான வறுமைக்கிடையேயும் பள்ளிப் படிப்பை முடித்த இன்பசேகரன் கோவை, ஹைதராபாத் வேளாண் பல்கலையில் பட்டம் பெற்றப் பிறகு, வேளாண் விஞ்ஞானியாக பணி புரியத் தொடங்கினார். எனினும் ஐஏஎஸ் ஆவது என்ற ஒரே இலக்குடன் கடுமையாக உழைத்த இன்பசேகரன், தற்போது ஐஏஎஸ் பாஸாகி, கோழிக்கோடு மாவட்டத் துணை ஆட்சியராக பொறுப்பேற்றுள்ளார். இலங்கையில் இருந்து தாயகம் திரும்பிய தமிழர்களில், முதல் ஐஏஎஸ் இன்பசேகரன்தான்.

இது குறித்து இன்பசேகரன் கூறுகையில், ""மலையகத் தமிழர்ளாக கடந்த பல ஆண்டுகளாக எங்கள் சமூகமே பல்வேறு இன்னல்களை சந்தித்து வந்திருக்கிறது. ஏற்காடு, உதகை, கொடைக்கானல் என பல இடங்களில் நாங்கள் சிதறிக் கிடக்கிறோம். தற்போது நான் இந்த பதவிக்கு வந்திருப்பது தமிழகத்தை எங்கள் மக்கள் மீது பார்வையை திருப்ப வைக்கும். தாயகம் திரும்பிய பலரும் என்னைப் போல படித்து உயர வேண்டுமென்பதே எனது ஒரே ஆசை" என்றார்.

# சமூக விழிப்புணர்வுக் களம்



நேர்காணல் :
பா. முரளிதரன்

## ஓர் அலசல்

## வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்துவது எவ்வாறு?



இன்றைய சமூகம் எதிர்நோக்குகின்ற பாரிய பிரச்சினை போதிய வருமானமின்மையும், வாழ்க்கைச் செலவுமே ஆகும். வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்துவது அரசாங்கத்தின் ஒரு முக்கியமான குறிக்கோளாக இருக்க வேண்டும். ஆனால் தொடந்து வரும் அரசாங்கங்கள் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தவிதமான தீர்க்கமான முடிவுகளையும் எடுக்க முன்வரவில்லை.

எனவே வாழ்க்கைச் செலவு கிடு கிடு என்று அதிகரித்துக் கொண்டே போகின்றது. இது ஒரு முக்கியமான சமூகப் பிரச்சினை என்றபடியால் தான் எமது சமூக விழிப்புணர்வுக் களத்திலே இந்த விடயம் சம்பந்தமாக ஆராய முன்வந்துள்ளோம்.

'தினச்செய்தி" எப்போதுமே வித்தியாசமான முறையில் தான் பிரச்சினை களை அணுகுவது என்பது நன்கு தெரிந்த விடயம். அந்த வகையில் இங்குள்ள தோட்டங்களுக்குச் சென்று அவர்களின் கருத்தைக் கேட்டு இங்கே பதிவு செய்கின்றோம்.

இங்கே எங்களுக்கு பேட்டி தந்த சகலரும் வல்வெட்டித்துறை மற்றும் கெருடாவில் பகுதியைச் சேர்ந்தவர்கள். விவசாயத்தையே தங்களுடைய முக்கிய தொழிலாகச் செய்து, வாழ்க்கையை ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களில் பலர் வரவேற்கதக்க கருத்துகளைக் கூறியுள்ளார்கள்.

விவசாயிகள் என்ற படியால், அவர்களின் கண்ணோட்டம் விவசாய உற்பத்தியில் தான் முதலிடம் வகிக்கிறது. பேட்டி தந்த அனைவரும் விவசாயச் செலவு உற்பத்தி உயர்வைப் பற்றித் தான் பெரிதும் விபரித்தார்கள்.

மேலும் அவர்கள் குறிப்பிடுகையில் காலநிலை மாற்றங்களினால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படுவதாகவும் அனேகமான எல்லாப் பயிர்களின் விளைச்சலும் குறைவாக இருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

விவசாயப் பயிர்கள் பல வகை கிருமிகளினால் பாதிக்கப்படுவதால் கிருமி நாசினிகள் பாவிக்க வேண்டி உள்ளதாக அவர்கள் தெரிவித்தார்கள். எவ்வளவோ சிரமப்பட்டு உற்பத்தி செய்தாலும் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான சீரான சந்தை வாய்ப்பு இல்லை என்றும் தெரிவித்தார்கள்.

இம் முறை தினச்செய்தியை சேர்ந்த பா. முரளிதரன் வல்வெட்டிதுறை, கெருடா பகுதியில் உள்ள விவசாயிகளை சந்தித்து அலசினார்.



**இரத்தினம், வல்வெட்டிதுறை.**

விவசாயத்தில் நவீனத்தை உட்புகுத்துவதன் ஊடாக, விளைச்சல்களை அதிகரிப்பதன் ஊடாக, விற்பனைகளை அதிகரித்து செலவினை குறைத்துகொள்ள முடியும். மேலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவதன் ஊடாகவும் நவீன உற்பத்தி முறைகளை கையாளுவதன் ஊடாகவும், வருமானத்தை அதிகரிக்கலாம். மேலும் பசளைகளை பயன்படுத்துவதன் ஊடாகவும் வாழ்க்கை செலவினை கட்டுப்படுத்த முடியும் என்று கூறினார்.

**ஆனந்தன் செல்வம், உடுப்பிட்டி, வல்வெட்டிதுறை**

அத்தியாவசியப் பொருளின் விலையை குறைத்தல் வேண்டும். மருத்துவச் செலவினை குறைத்தல் வேண்டும், என்பதன் ஊடாக வாழ்க்கை செலவைக் கட்டுப்படுத்தலாம் என்று கூறினார்.



**செல்வமாணிக்கம் புஸ்பராணி நாவலடி உடுப்பிட்டி.**

விவசாயப் பொருட்களின் விலையை அதிகரிப்பதன் மூலம் அதிக வருமானங்களைப் பெற்று, செலவுகளைக் குறைக்கலாம் என்றும், சம்பளம் கூலி என்பனவற்றையும் அதிகரிப்பதன் மூலமாகவும், மேலும் தற்போது நிலவிவரும் பொருட்களின் விலை அதிகரிப்பை குறைப்பதன் மூலம் வாழ்க்கை செலவைக் குறைக்கலாம் என்று கூறினார்.



**இ. வைரவநாதசுப்பிரமணியம் கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை**

பணப் பயிர்களை (புகையிலை, வெங்காயம்) என்பவற்றின் விலை அதிகரிக்கப்பட வேண்டும். உணவுப் பழக்க வழக்கங்கள் (ஆடம்பர உணவு பழக்க வழக்கங்களை) செலவுகளை குறைத்தல் வேண்டும் என்று கூறினார்.



**சிவராசா குகதாஸ் (விவசாயி)**

தொடர்ச்சியாக பொருட்களுக்கான விலைகள் குறைவடைய வேண்டும அரசாங்க மானியம் வழங்க வேண்டும். வங்கிகள் விவசாயிகளின் கடன்களின் வட்டியினை குறைக்க வேண்டும் என்பவற்றின் ஊடாக வாழ்க்கைச் செலவை குறைக்கலாம்.





**சசிகுமார் கமலாயினி, உடுப்பிட்டி வல்வெட்டிதுறை.**

முதலாவதாக அன்றாட நுகர்வுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டும், கூலி அதிகரிக்க வேண்டும். பிள்ளைகளின் படிப்புச் செலவினை குறைப்பதன் மூலம் செலவினை கட் டுப்படுத்தலாம் என்று கூறி னார்.


**ரகு சுரிதா : கம்பர்மலை வல்வெட்டிதுறை**

விவசாயப் பொருட்களின் உற்பத்திக்குத் தேவையான உற்பத்திச் செலவுகளை (உரம், கூலி) குறைப்பதன் மூலம், வருமானத்தை அதிகரிக்கலாம். மேலும் ஆடம்பரப் பொருட்களைக் குறைத்தும் செலவுகளைக் கட்டுப்படுத்தலாம் என்றும் தெரிவித்தார்.



**கி. கிருஸ்ணரூபன் ஊரிக்காடு, வல்வெட்டித்துறை**

முதலாவதாக வேலை வாய்ப்பற்று காணப்படும் இளைஞர், யுவதிக ளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதன் ஊடாக அவர்களுக்கான வருமானத்தை அதிகரிக்க முடியும். மேலும் உரம், பசளைகள் என்பவற்றை பயன்படுத்தி விவசாய விளைச்சல்களை அதிகரிக்கலாம்.




# சொன்னார்கள் சொன்னார்கள்



ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பயணத்தை யாராலும் தடுக்கமுடியாது. அப்பயணம், முன்னாள்அமைச்சர் பசில் ராஜபக்ஷவையும் கொண்டு முன்னகர்த்தப் படும் என்று தெரிவித்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, ஜனாதிபதி ஆசனத்தில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அமர வைப் பதே எமது ஒரே இலக்காகும் என்றும் கூறினார்.

மத்திய அரசாங்கம் வடக்கில் மேற் கொள்ளும் அபிவிருத்தி வேலைகளை வட மாகாண சபையுடன் பேசியே செய்ய வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்வதில்லை என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். வவுனியா, சிதம்பரபுரம் முகாம் மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வின் போது இவ்வாறு தெரிவித்தார்.





நல்லாட்சி அரசாங் கத்தால் அடக்கப்பட்ட ராஜபக்ஷ சிந்தனைகள் மீண்டும் பேயாக வருவதற்கு முயற்சித்து வருவதாகவும் இதற்கு இடமளிக்க முடியாது எனவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்ததுடன், 2015 புரட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய வர்கள் அனைவரும் இதனை அழிக்க ஒன்று பட வேண்டுமெனவும் அறைகூவல் விடுத்துள்ளார்.



காணாமல் போனவர்கள் குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகமவின் கருத்துப்படி இறுதி யுத்தத்தின் போது கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டமை உறு தியாகியிருப்பதாக, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டார்.

முஸ்லிம்களின் ஆன்மீக கட்டுப்பாடு, அர்ப்பணிப்பு போன்றே சமத்துவத்துக்கு வழிகாட்டும் அவர்களது தாராளத்தன்மை தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாகும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்திருக்கும் ஈகைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.



இலங்கையில் நம்பகத் தன்மையை உத்தரவாதப்படுத்து வதற்கும் சுதந்திரம், பக்கச்சார்பின்மையை உறுதிப்படுத்துவதற்கும் சர்வதேச பங்களிப்பு அவசியமானதென ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் அல் ஹூசைன் உறுதிப்படுத்தியிருக்கிறார்.





பாலியல் வதை, போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனை குற்றம் சாட்டப் படுகின்ற தனியார்கல்வி நிறுவனங்கள் உடனடியாக இழுத்து மூடப்படும் அந்த நிறுவனங்களின் பொறுப்பாளர் களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை செய்துள்ளார்.

## எருவாகும் உணவுக் கழிவுகள்!

பெரிய நகரங்களில் வீணாகும் உணவு மற்றும் காய்கறி மீதங்கள் மற் றைய குப்பைக் கழிவுகளில் போய் கலக் கின்றன. இவை, நகர எல்லையில் மலைபோல குவிக்கப்படும்போது துர் நாற்றம் வீசுவதோடு, பிளாஸ்டிக், உலோகம் போன்ற பிற குப்பையை பிரித் தெடுப்பது சவாலாக மாறிவிடுகிறது.

நியூயோர்க் நகரிலும் இதே பிரச்சினை தான். இதற்கு அமாண்டா பிரின்சோ என்ற மறு சுழற்சி ஆர்வலர் ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறார். உணவுக் குப்பையை மக்கச் செய்து, உரமாக மாற்று வதற்கு மூன்று மாதங்களா வது ஆகும். ஆனால், அமாண்டாவும் அவரது குழு வினரும் உருவாக்கி யுள்ள புதிய முறைப்படி, ஒரு தரத்திலேயே உணவுக் கழிவுகள் மக்கி எருவாகி விடுகின்றன. அதுமட்டுமல்ல, உண வுக் கழிவுகள் துர்நாற்றம் அடிக்கும். ஆனால், அமாண்டாவின் புதிய முறைப் படி, எருவில் துர்நாற்றம் இருப்ப தில்லை. இந்த எருவை வில்லை கள் போல ஆக்கி, பைகளில் அடைத்து விற் கிறது அமாண்டாவின் இண்ட ஸ்ட்ரியல் ஆர்கானிக் நிறுவனம். பல மறு சுழற்சி ஆர்வலர்கள் ஆங்காங்கே உணவுக் கழிவுகளை மக்குவதற்கு பயன்படுத் திய முறையைத்தான் அமாண்டா, இயந்திரங் கள் மற்றும் இயற்கை வேதிப் பொருட்கள் மூலம் விரைவுபடுத்தியிருக்கிறார். சில வேதிப் பொருட்கள் மூலம் உணவுக்




கழிவுகளை ஊறுகாய் போல ஆக்கி, வேகமாக நொதிக்கச் செய்கிறார் அமா ண்டா. பிறகு அவற்றிலுள்ள நீரை நீக்கி, உலரச் செய்து எருவாக்கி விடுகிறார். அந்த நீரை மீண்டும் பயன்படுத்த முடி யும் என்பதும் கூடுதல் பலன்.




## நாயை கண்டா போதும்!!!

இந்தியாவின் ஆதிகுடிகள் இன்னமும் வேட்டையாடுதலை தங்களது பாரம்பரிய பண்பாடுகளில் ஒன்றாகவே வைத்துள்ள னர். ஆனாலும் விலங்குகளுக்கும் ஆதி குடிகளுக்குமான வாழ்வியல் புரிதல் நீடித்த ஒரு சங்கிலித் தொடராக இருக்கிறது... இந்தியாவின் பெரும்பாலான ஆதிகுடிக ளின் உற்ற தோழனாக உறுதுணை யாக இருப்பது நாய்கள்தான்... அதே நேரத் தில் இதே இந்திய தேசத்தின் வட கிழக்கு மாநிலங்களின் நாகா ஆதிகுடி இனமக்க ளுக்கோ நாய்கள் என்றால் அப்படி ஒரு கொண்டாட்டம்...


ஆம் நாம் பொதுவாக விருந்தினர்களுக்கு ஆடு, கோழி விருந்து வைப்பது போல நாகா இன மக்களுக்கான ஸ்பெஷல் அயிட்டமே 'நாய் கறிதான்"... நாகாலாந்தின் தலைநகர் கோஹிமாவின் சந்தைகளே விசித்திர உலகத்தில் நுழைந்தது போலதான் இருக் கிறது...


இந்த சந்தைக்கு அப்பால் ஒரு இடம் உண்டு.... கோஹிமா நகரின் ஹை லைட்டே இங்குதான்.... ஆங்காங்கே சாக்கு களில் தலை மட்டுமே தெரியும்படியாக உயி ருள்ள நாய்கள் மரணவாசலில் நிறுத்தப் பட்டிருக்கும். நாய் லெக்பீஸ், சப்பைபகுதி என கூறுவைக்கப்பட்டு விற்பனை செய்யப் படுகின்றன.. இவை ரொம்பவும் கொஸ்ட்லி யானவை. நாய் கண்ணில் பட்டாலே போதும். கபளீகரம்தான்... கறி விருந்து தான் என்கின்றனர். அப்படி ஒரு பண்பாடு 'நாகா' இனமக்களிடத்தில் இருக்கிறதாம்..



# இந்தியாவின் நிலைப்பாடும் திம்புப் பேச்சுவார்த்தையும்

அனுராதபுர படுகொலையை அடுத்து தமிழ் போராளி குழுக்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை இந்திய அரசு அறிவித்தது. இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அவர் பகிரங்கமாக அறிவித்தார்.





ஆரம்பத்தில் அந்த யுத்த நிறுத்தத்தை தான் எதிர்த்ததாகவும் பின்னர் இந்தியாவினுடைய நிர்ப்பந்தத்தை அடுத்து தனது மனதை மாற்றி கொண்டதாகவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் அந்த யுத்த நிறுத்தம் சம்பந்தமாக மிகவும் உணர்ச்சி வசப்பட்டார். சில சமயம் மற்றைய போராட்டக் குழுக்கள் தமிழ் அரசியல்வாதிகள் போல போராட்டத்தை கைவிட்டு விட்டு இலங்கை அரசுடன் சமாதானமாகிப் போய் விடுவார்களோ என்று அவரது உள்ளத்தில் ஓர் ஐயப்பாடு எழுந்தது.

அவ்வாறு நடப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிரபாகரன் அறிவித்தார். 'நாங்கள் ஆயுதங்கள் தூக்கியது எங்களு டைய மக்களின் விடுதலையை வென்று எடுப்பதற்கும், எமது மக்களின் கௌரவத்தை நிலை நாட்டுவதற்கும் தான் எனவே இந்த விடுதலையையும், கௌரவத்தையும் வென்றெடுக்கும் வரை, எங்களுடைய ஆயுதங்களை நாங்கள் ஒப்படைக்க மாட்டோம்," என்றார்.

'சுதந்திரமான ஒரு தமிழ் ஈழம் கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும்," என அவர் கூறினார். இவ்வாறு பிரபாகரன் அறிவிப்பது இது தான் முதல் முறை அல்ல.

சிங்களவருடன் சமாதானம் செய்து ஒரு போதும் வாழ முடியாது என கருதினார். மேலும் சுதந்திரமான தமிழ் ஈழம் கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

ஆனால், இந்திய உத்தியோகத்தர்கள் பிரபாகரனின் நிலைப்பாட்டை காலப்போக்கில் மாற்றி அமைக்க முடியும் என்று எண்ணினார்கள். ஆனால் அவர்களின் கருத்து தவறானது என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது.

1985 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இந்திய றோ (ஆய்வு பகுப்பாய்வு) உத்தியோகத்தர்கள் பிரபாகரனின் கருத்துக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்க முன் வரவில்லை. இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துடனும் போராட்டக் குழுக்களுடனும் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த ஏற்பாடு செய்தது. இந்தப் பேச்சுவார்த்தையை இமாலய பிரதேசத்தில் உள்ள பௌத்த இராச்சியமான பூட்டானின் தலைநகரான திம்புவில் நடாத்தத் திட்டமிட்டது.

## பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும்


இந்தப் பேச்சுவார்த்தையை அனேகமாக எல்லோருமே வரவேற்கவில்லை. இந்திய அரசாங்கத்தின் எடுப்பார் கைப்பிள்ளை என்று கருதப்படும் ரெலோ இயக்கம் கூட, போராளிகளை இந்தியா நிர்ப்பந்தமாக பேச்சுவார்த்தைக்கு இழுத்து செல்கிறார்கள் என்று கருதியது. அதே நேரம் பிரபாகரன் இந்த பேச்சுவார்த்தையை கடுமையாக எதிர்த்தார். சிங்களவர்களை நம்ப முடியாது என்று அவர் கூறினார்.

ஒரு நாள் ஆய்வு பகுப்பாய்வு பிரிவை சேர்ந்த உத்தியோத்தர்கள் பிரபாகரனை சென்னையில் சந்தித்து கட்டாயம் பிரபாகரன் பூட்டானுக்கு போக வேண்டும் என்றும், எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை என்றும் தீர்க்கமாகக் கூறினர்.

"மறந்து விட வேண்டாம். நீங்கள் பூட்டான் போகாவிட்டால் எங்களுடைய கடலும், நிலமும் வருங்காலத்தில் உங்களுக்குக் கிடைக்கமாட்டாது," என்று கூறினார்.

இவ்வாறு அந்த றோ உத்தியோகத்தர் கூறியதை செவிமடுத்த பிரபாகரனின் முகத்தில் அமைதியின்மை தெளிவாகப் புலப்பட்டது. கலக்கத்துடன் பாலசிங்கத்தைப் பார்த்தார். பாலசிங்கம் இந்த நிர்ப்பந்தம் சம்பந்தமாக தெரிவிக்கும் போது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் பிரதிநிதிகளை இந்தக் கூட்டத்திற்கு அழைக்கக் கூடாது. அவர்கள் செல்லாக் காசாகி விட்டார்கள் என்று கூறினார். இதனைச் செவிமடுத்த றோ பிரதிநிதி ' நீங்கள் பேச்சுவார்த்தைக்குப் போக வேண்டும், உங்கள் போராட்டத்தைக் கைவிடுமாறு நாங்கள் கேட்டுக் கொள்ளவில்லை. என்ன தான் இருந்தாலும் நீங்கள் இந்தப் பேச்சுவார்த்தைக்குப் போகத்தான் வேண்டும்," என்று கூறினார்.

அதை அடுத்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, புளொட், ஈழ தேசிய இடது சாரி முன்னணிகளின் நான்கு தலைவர்களும் சென்னையில் இருந்து டெல்லிக்கு விமானத்தில் பயணமானார்கள்.



இந்திய வெளிவிவகார அமைச்சு உத்தியோகத்தருடன் இந்த முறை தான் முதல் முதலாக போராளி குழுக்கள் சந்தித்து அவர்களுடைய நடவடிக்கையை புரிந்து கொள்ள கூடியதாக இருந்தது. ஆனால் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக கருதப்பட்டார்கள். இந்திய வெளிவிவகார உத்தியோகத்தர்களுடன் அவர்கள் தொடர்பிலே இருந்தார்கள்.

ஒரு காலத்தில் தமிழர்களின் தலைவர்களாக இருந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி போராளிக் குழுக்களுடன் சரிசமனாக இருந்து இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவைகள் எல்லாவற்றையும் பார்த்து பிரபாகரன் வெறுப்படைந்த போதிலும் 1983 ஆம் ஆண்டு தொடக்கம் சென்னையில் வாழ்ந்த அவர், சென்னையில் இருந்து டெல்லி போகும் நிலை ஏற்பட்டது.

டெல்லியில் பிரபாகரனைச் சந்தித்த றோ உத்தியோகத்தர்கள் பிரபாகரன் முகத்தில் ஏதோ மாற்றம் இருப்பதைக் கண்டு கொண்டார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரின் முகத்தில் எப்போதும் இருந்த மீசையை காணவில்லை என்பதைக் கண்டு கொண்டார்கள்.


அந்த மீசைக்கு என்ன நடந்தது என்று கேட்டார்கள். ஏளனமாக வார்த்தைகள் வெளி வர 'நாங்கள் யுத்தம் புரிகின்ற பொழுது தான் மீசை வைத்திருப்போம் பேச்சுவார்த்தைக்கு வர சொல்லிக்கேட்டால் மழித்து விடுவோம்," என்று கூறினார்.

டெல்லி வந்த அன்று மாலை மற்ற மூன்று போராளிக் குழு தலைவர்களுடன் ராஜதந்திர கேந்திர நிலையமான சாணாக்கிய புரியில் உள்ள சினிமாப் படமாளிகைக்கு ஒரு ஹொலிவூட் படத்தை பார்ப்பதற்கு சென்றார்கள்.

அதை அடுத்து போராட்ட குழுகளின் பிரதிநிதிகள், தலைவர்களை இந்திய அரசாங்கம் புது டெல்லி ராஜ் காற்றில் உள்ள மகாத்மா காந்தியின் சிலை அமைந்திருந்த அவரது மணி மண்டபத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கு சென்ற சமயம் பிரபாகரன் இ.பி.ஆர்.எல்.எப். இன் தலைவரான பத்மநாதனின் கையைப் பிடித்து 'நாங்கள் எங்கள் போராட்டத்தை கைவிடுவோம். வன்முறை அற்ற பாதையை பின் பற்றுவோம், இதைத் தான் இந்திய அரசாங்கம் எம்மிடமிருந்து எதிர்பார்க்கிறது," என்று கூறினார்.

பிரபாகரனின் பேச்சின் அர்த்தத்தினை சற்று தொலைவில் நின்று கொண்டிருந்த ஈரோஸ் இன் தலைவர் பாலகுமாரனால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. 'அங்கே நீங்கள் இரண்டு பேரும் என்ன குசுகுசுக்கிறீங்கள்?" என்று பாலகுமாரன் கேட்டார். பிரபாகரன் ஓர் நமுட்டுச்சிரிப்பு சிரித்தார். அந்த சிரிப்பு இந்திய அரசாங்கத்தைக் கேலிசெய்யும் சிரிப்பாக இருந்தது என்பது தெளிவாகிறது. (தொடரும் ...)

அரசகேசரி



# நஞ்சாகும் தண்ணீர் போத்தல்கள்

நாம் வாங்கும், பயன்படுத்தும் அனைத்து தண்ணீர் போத்தல்களும் ஒரே வகையிலான பிளாஸ்டிக் பொருட்களால் தயாரிக்கப்படுவதில்லை. நாம் விலையில் மட்டுமே மாற்றங்களை காண்கிறோம். ஆனால், அதன் பின்னணியில் இருக்கும் தரத்திலும் நிறைய மாற்றங்கள் இருக்கின்றன. இந்த மாற்றங்கள் தான் நமது உடல் நலத்திற்கு பெரும் அபாயமாக அமைகின்றன. ஆம், ஒருசில பிளாஸ்டிக் பொருட்கள் நாற்காலி, ரிவி போன்றவை தயாரிக்க தான் பயன்படுத்த வேண்டும். ஒருசில பிளாஸ்டிக் பொருட்கள் தான் தண்ணீர் போத்தல் தயாரிக்க பயன்படுத்த வேண்டும். எந்தெந்த பிளாஸ்டிக் உகந்தது, தீயது என்பதை அதில் இருக்கும் குறியீட்டு எழுத்துக்களை வைத்து கண்டறியலாம்...

## PET / PETE

பெரும்பாலான பொருட்கள் இந்த வகை பிளாஸ்டிக்கில் தான் தயாரிக்கப்படுகின்றன. தண்ணீர் போத்தல், கூல் ட்ரிங்க்ஸ் சில பேக்கேஜ் போன்றவைகளில் இந்த பிளாஸ்டிக் பயன்படுத்தப்படுகின்றன. இது ஒருமுறை மட்டும் பயன்படுத்த வேண்டிய பிளாஸ்டிக் பொருளாகும். மீண்டும், மீண்டும் இதை பயன்படுத்துவதால் பக்டீரியா வளர்ச்சி அதிகமாகும் அபாயம் இருக்கிறது. இது மிகையான நச்சுத்தன்மை உடையது என்பது குறிப்பிடத்தக்கது.

எச்.டி.பி. வகை கடினமான பிளாஸ்டிக் பால் ஜக் (Jug), டிட்டர்ஜன்ட், எண்ணெய் போத்தல்கள், பொம்மைகள் மற்றும் பிளாஸ்டிக் பேக் போன்றவை தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. இந்த வகை பிளாஸ்டிக்கில் எந்த இரசாயன வெளிப்பாடுகளும் இருப்பதில்லை. இந்த வகை போத்தல்களில் நீர் பிடித்து குடிப்பது தவறில்லை, இவை பாதுகாப்பானவை. எனவே, இந்த சீல் உள்ள போத்தல்களை தண் ணீர் குடிக்க பார்த்து வாங்குங்கள்.

## PVS/3V

மிருதுவான, வளைந்துக் கொடுக்கும் பிளாஸ்டிக். உணவுப் பொட்டலங்களை கட்டுவதற்கு, சில வகை குழந்தைகள் பொம்மை, போன்றவை தயாரிக்க இந்த பிளாஸ்டிக் பயன்படுத்தப்படுகிறது. இதிலிருந்து இரண்டு வகையான நச்சுத் தன்மை உள்ளது. இந்த நச்சுக்கள் உடலின் ஹோர்மோன்களை பாதிக்கவல்லது. எனவே, இதை தவிர்ப்பது நல்லது என ஆராய்ச்சியாளர்கள் அறிவுரைக்கின்றனர்.

## LDPE

தண்ணீர் போத்தல்கள் தயாரிக்க இந்த பிளாஸ்டிக் வகை பயன்படுத்தவே கூடாது. இது எந்த கெமிக்கலும் வெளிப்படுத்துவதில்லை எனினும், இந்த பிளாஸ்டிக் பொருட்களில் உணவுகள், பானங்கள் அடைத்து பருகுவது உடலில் நச்சுத்தன்மை அதிகரிக்க பெரும் காரணமாக இருக்கிறது.

## pp

வெள்ளை அல்லது பாதி ட்ரான் ஸ்பர் நிறத்தில் இருக்கும் இந்த பிளாஸ்டிக் மருந்துகள் மற்றும் தயிர் போன்றவை அடைக்க பயன்படுத் தப்படுகின்றன. இது நிறை குறை வானது. இது சூட்டை தாங்கும் தன்மை உடையது. சூடு செய்தால் இவை வேகமாக உருகாது.

## PS

பாலீஸ்டிரின் (PS) மிகவும் விலை அதிகமான, நிறை குறைவான பிளாஸ் டிக். பானம் குடிக்கும் கப், உணவுகள் அடைப்பதற்கு, முட்டை அடுக்கி வைக்க என பல்வேறு பயன்பாட்டிற்கு இது உபயோகப்படுகிறது. இதை நீண்ட காலம் மீண்டும், மீண்டும் பயன்படுத்த கூடாது.




## PC /

பெயரிடப்படாத பிளாஸ்டிக் ஸ்போர்ட்ஸ் தண்ணீர் போத்தல், உணவு பொருட்கள் அடைப்பதற்கு இவை பயன்படுத்தப் படுகின்றன. இது ஒரு வகையான மிகவும் அபாயாமான பிளாஸ்டிக் ஆகும். இது மறுசுழற்சிக்கு உகந்ததல்ல. இது, உணவு பொருட்கள் அடைக்கும் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்க தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் (BPA) கலப்பு கொண்டுள்ளது ஆகும்.




**வியாழன்** கிரகத்தை ஆய்வு செய்வதற்காக 110 கோடி அமெரிக்க டாலர்கள் செலவில் திட்டமிட்டு ஐந்தாண்டுகளுக்கு முன்னர் ஏவப்பட்ட ஜூனோ விண்கலம் 170 கோடி மைல்கள் (270 கிலோமீட்டர்) தூரம் பயணம் சென்று கடந்த செவ்வாய்க்கிழமை வெற்றிகரமாக வியாழனுக்குள் நுழைந்தது.

சூரியனிலிருந்து ஐந்தாவதாக அமைந்துள்ள வியாழன் (Jupiter) சூரிய மண்டலத்திலேயே மிகப் பெரிய கோள் ஆகும். வளி அரக்கக் கோள்கள் நான்கில் வியாழனும் ஒன்றாகும்.


சூரிய மண்டலத்தின் உட்கோள்களான புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகிய பாறைக் கோள்களைப் போன்றல்லாது, புறக்கோள்களில் ஒன்றான வியாழன் சூரியனைப் போல் வாயுக்கள் திரண்ட கோளமாகும். சூடான பாறையும், திரவ உலோகம் சிறிதளவு உட்கரு கொண்டிருந்தாலும், மேல்தளத்தில் திரட்சியான திடப்பொருள் எதுவும் வியாழனில் கிடையாது.

பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ள 24 மணி நேரமாகும் போது, மிகப்பெரிய வடிவம் கொண்ட வியாழன் 9 மணி 50 நிமிடத்தில், அதாவது வினாடிக்கு 8 மைல் வேகத்தில் வெகு விரைவாகத் தன்னைத்தானே சுற்றி விடுகிறது.


சூரிய சுற்றுப்பாதையில், சுமார் 484 மில்லியன் மைல் தூரத்தில், சூரியனைச் சுமார் 12 பூகோள ஆண்டுகளுக்கு ஒருமுறை வியாழன் சுற்றி வருகிறது. இந்த வியாழன் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான 'நாசா' கடந்த 5-8-2011 அன்று புளோரிடா மாநிலத்தில் உள்ள கேப் கார்னிவல் ஏவுதளத்தில் இருந்து 'ஜூனோ' என்ற ஆளில்லா விண்கலத்தை விண்ணில் ஏவியது.

கடந்த ஐந்தாண்டுகளாக விண்வெளியை சுற்றிப் பயணித்த ஜூனோ வெற்றிகரமாக வியாழனின் சுற்றுவட்டப் பாதைக்குள் நுழைந்தது. அமெரிக்க நேரப்படி, 4 ஆம் திகதி இரவு 11.53 மணியளவில் (இலங்கை நேரப்படி கடந்த செவ்வாய்க்கிழமை காலை சுமார் 9 மணியளவில்) வியாழனுக்குள் ஜூனோ பிரவேசித்த வெற்றியை நாசா அதிகாரிகள் மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்ந்தனர்.

110 கோடி அமெரிக்க டாலர்கள் செலவில் வியாழனை ஆய்வு செய்வதற்காக திட்டமிட்டு ஐந்தாண்டுகளுக்கு முன்னர் ஏவப்பட்ட ஜூனோ விண்கலம் 170 கோடி மைல்கள் (270 கிலோமீட்டர்) கடந்து இன்று வியாழனுக்குள் நுழைந்துள்ளது, குறிப்பிடத்தக்கது.





## வாரமொரு குறள்

*குறள் 37*

*அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.*

**பொருள்**

அறவழியில் நடப்பவர்கள் பல்லக்கில் உட்கார்ந்து செல்பவர்களைப் போல வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்கள் இரண்டையும் எளியவாகக் கருதி மகிழ்வுடன் பயணத்தை மேற்கொள்வார்கள். தீய வழிக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டவர்களோ பல்லக்கைத் தூக்கிச் சுமப்பவர்களைப் போல இன்பத்திலும் அமைதி கொள்ளாமல், துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவமின்றி வாழ்வையே பெரும் சுமையாகக் கருதுவார்கள்.

## பெரியோர் வாழ்வில்...



பெர்னார்ட் ஷா ஒருமுறை பழைய புத்தகக் கடைக்குச் சென்றார். அங்கு தாம் ஒருவருக்கு கையெழுத்திட்டுப் பரிசளித்த நூலைக் கண்டார். அதை விலைக்குவாங்கி. "புதுப் பிக்கப்பட்ட வாழ்த்துகளுடன்' என எழுதிக் கையொப்பமிட்டு மறுபடியும் பரிசளித்தவருக்கே அனுப்பினார்.




"ஒரு தேவதை இருந்தாள். அவள் பெயர் மின்தா (míntha). அழகு கொஞ்சும் கண்கள் அவளுக்கு. நிலவு போன்ற வட்ட முகம். கொஞ்சும் மொழியில் பேசினாள். எல்லோர் மீதும் அன்பு செலுத்தினாள். அப்படிப்பட்ட ஒரு தேவதையைப் பார்த்தால் எல்லோருக்கும் பிடிக்கும்தானே! அப்படித்தான் பிடித்தது கிரேக்க பாதாளக் கடவுளான ஹேடஸ் (Hades) என்பவருக்கு. ஆனால் ஹேடஸின் மனைவியான பெர்சிபோனுக்கு (Persephone) மட்டும் மின்தாவைப் பிடிக்கவில்லை. தன் கணவர் அந்த தேவதையை பார்க்காமல், பேசாமலிருக்க என்ன வழி என்று யோசித்தாள். மின் தாவை ஒரு செடியாக மாறும்படி சபித்துவிட்டாள்.

ஹேடஸ்"க்கு விஷயம் தெரிந்தது. தேவதையை மறுபடியும் பெண்ணாக்க முடியாததால் வருந்தினார். செடியாக மாறிய மின்தாவிற்கு நல்ல மணமும், மருத்துவ குணமும் சுவையும் கிடைக்கும்படி செய்தார். அன்றாடம் சமையலில் பயன்படும் புதினாதான் (Mint) அந்த தேவதை!

## நீண்ண்ட ஆயுள் மீன்!

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, நமீபியா, வடகிழக்கு அட்லான்டிக் கடல்களில், 600 மீற்றடர் ஆழத்தில் வசிக்கும் மீன் இது. பெயர் ஒரேஞ் ரஃபி. நன்கு வளர்ச்சியடைந்த மீன் ஒன்று முக்கால் மீட்டர் நீளம் வரை இருக்கும். இதன் சுவை அலாதியானது என்று சொல்லப்படுகிறது.



சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் வரை இப்படி ஒரு சுவையான மீன் இருப்பது மீன் பிரியர்களுக்கு அவ்வளவாகத் தெரியாமல் இருந்துள்ளது. அதற்குக் காரணம் கடலின் அடி ஆழத்தில் இவை காணப்படுவதே. 'ட்ரோலர்' எனப்படும் இழுவை மீன்பிடி படகுகள் வருவதற்கு முன்னர், வலையை விரித்துக் கடலின் மேற்பரப்புகளில் காணப்படும் மீன்களை மட்டுமே பிடிப்பது வழக்கமாக இருந்தது. இதனால், ஆழத்தில் இருந்த இந்த மீன்கள் பற்றி மக்களுக்கு அதிகம் தெரியவில்லை. ட்ரோலர் வந்த பிறகு, ஆழத்தில் இருக்கும் மீன்களைப் பிடிப்பது சாத்தியம் ஆனதால், அள்ள அள்ள சுவையான ஒரேஞ் மீன்கள் கிடைத்தன.

மீன்கள் மிகவும் நிதானமாக வளர்ந்து, 150 வருடங்கள்வரை வாழக் கூடியவை என்பது தெரியவந்தது. மீன் இனத்திலேயே அதிக வாழ்நாள் கொண்டவை இந்த ஒரேஞ் ரஃபிகள் தானாம்!

அதைவிட அதிசயம், மிக நீண்ட வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே சினை கொள்ளும் பண்பை இவை பெற்றிருக்கின்றன. அதுவும் 20 வயதில் இருந்து 30 வயதுக்குள் இவற்றின் மறு உற்பத்தி திறன் முடிந்து விடுமாம். ஆக, ஒரு மீன் பிடிக்கப்பட்ட பிறகு, அடுத்த மீன் குஞ்சு பொரித்து வளர்வதற்குக் குறைந்தது 40 ஆண்டுகள் ஆகிவிடும். சினை கொள்ளாத மீன்களைப் பிடித்துவிட்டால், வாய்ப்புகள் இன்னும் குறைவு. மறுஉற்பத்தி வேகத்தைக் காட்டிலும் வேகமாக வேட்டை ஆடப்பட்டதால், இன்று இதன் தொகை 10 சதவிகிதத்துக்கும் குறைவாகிவிட்டதாம்.



## குறுக்கெழுத்துப் போட்டி - 10

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ |
| | ■ | 4 | | ■ | 5 |
| ■ | 6 | | ■ | 7 | ■ |
| 8 | | ■ | 9 | | |
| | ■ | 10 | | | ■ |
| 11 | | | ■ | 12 | |

**இடமிருந்து வலம்**

1. ஔவையார்
4. பொருட்கள் வாங்கும் இடம்.
6. உழவனின் தோழன்
8. இதுவும் நிலமும் வேண்டுமென்றான் பாரதி
9. இவள் மடி மெத்த்த என்றது சினிமாப் பாடல்.
10. வெற்றி பெற்றவர்களுக்குக் கிடைப்பது.
11. பயிர் செய்ய முடியாத நிலம்.
12. நல்ல காரியத்திற்கு இது போடக் கூடாது.

**மேலிருந்து கீழ்**

1. இது இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரையாம்.
2. நெல்லின் இது தலை சாய்ந்திருக்கும். (குழம்பியுள்ளது)
3. மீன் இனங்களில் ஒன்று.
5. யாகாவாராயினும் இது காக்க என்றான் வள்ளுவன்.
6. ஏற உதவுவது.
7. இது சோறிடும் என்பார்கள் (குழம்பியுள்ளது)
8. காதை அலங்கரிப்பது.
9. சிங்கம்.
10. சாதுவான மிருகம்.

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் ஜூலை 21 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 23.07.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப்போட்டி - 8 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1. வானவில்
5. திருவிழா
6. பனி
9. சக்கரம்
10. குப்பை

**மேலிருந்து கீழ்**

1. வாலிபன்
2. விதி
3. வில்லை
4. கருமி
7. பாக்கு
8. கரம்
10. சபை

### சரியான விடையை எழுதியவர்கள்

1. அ. மாலினி, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
2. மா. புவிதரன், பருத்தித்துறை வீதி, நீர்வேலி.
3. வி. சுமித்திரா, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.
4. ஆர். சசிகுமார், கே.கே.எஸ்.வீதி, தெல்லிப்பழை.
5. மு. காஞ்சனா, நெலுக்குளம், வவுனியா.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 10**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

## இரட்டை நாயகி



ஓ.கே. காதல் கண்மணி' படத்தில் சோலோ ஹீரோயினாக பெர்ஃபாமென்ஸ் காட்டி பிரமிக்க வைத்தவர், நித்யா மேனன். சினிமா உலக சூத்திரம் தெரிந்த நித்யா, "ஹீரோயினாகத்தான் நடிப்பேன்" என்று அடம் பிடிக்காமல் டபுள் ஹீரோயின் வேடம் கிடைத்தாலும் தாராளமாய் ஓ.கே சொல்கிறார். ஏற்கனவே '24' படத்தில் சமந்தா வுடன் நடித்தவர்.

## புதிய குழந்தை நட்சத்திரம் அறிமுகம்

விஜய் நடிப்பில் கடைசியாக வெளிவந்த 'தெறி' படத்தில் மீனாவின் மகள் நைனிகா குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார். விஜய் தற்போது 60 ஆவது படமான பரதன் இயக்கும் புதிய படத்தில் நடித்து வரும் குழந்தையின் பெயர் மோனிகா சிவா வேறு சில படங்களிலும் நடித்து வருகிறார். துருதுருவென இருக்கும் இந்தக் குழந்தையின் சேட்டைகளை அனைவரும் ரசித்து வருகிறார்களாம். 'தெறி' படத்தில் நைனிகா விஜய்யின் மகளாக நடித்ததுபோல், இந்த படத்தில் இந்த குழந்தை விஜய்யின் மகளாக நடிக்குமா? என்றால் அதுபற்றி எதுவுமே சொல்லக் கூடாது என்று சொல்லி நம் வாயை அடைக்கிறாள்.





## அண்ணி



சன் டி.வியில் ஒளிபரப்பாகி வரும் "தெய்வமகள்" சீரியலில் "காயத்ரி" கதாபாத்திரத்தில் வில்லியாக நடித்து அசத்தி வருபவர் ரேகா குமார். கிட்டத்தட்ட 17 வருடங்களாக வெள்ளித்திரை, சின்னத்திரை என கலக்கிக் கொண்டிருப்பவர்.கதநாயகிக்கு நிகரான ரசிகர் பட்டாளம் இவருக்கு உண்டு. மலையாளத்தில் "சேச்சி அம்மா" எனும் முதல் சீரியலிலேயே நெகட்டிவ் ரோல்தான் கொடுக்கப்பட்டது. இப்பொழுதும் அந்த சீரியலில் வந்த "மாயா மிர்கா" ரோல்தான் பலருக்கும் பரிசசயம். "சேச்சி அம்மா" சீரியலில் அந்த ரோல் பெரிய அளவுக்கு பிரபலமானது. தமிழ், மலையாளம் தவிர "கன்னடம், தெலுங்கு சீரியல்களிலும் நடித் திருக்கிறார். கன்னட சீரியல் "avayaktha" மூலம் எனக்கு நல்ல பெயர் கிடைத்தது. கதாநாயகி கதாபாத்திரம் தவிர, அண்ணி, அக்கா, அம்மா என பல கதாபாத்திரங்களில் கலக்குகிறார்.

## குறும்பட நாயகி



திரைப்படங்களில் ஹிட் அடிப்பதைப்போ குறும்படங்களிலும் நடித்து அப்ளாஸ் அ ராதிகா ஆப்தே. சமீபத்தில் இவர் நடித்த குறும்படம் வெளியான முதல் நாளிலே வியூஸ் குவித்திருக்கிறது. தன் தோழியு மருத்துவருமான ராதிகா ஆப்தேவிடம், யைப் பற்றி சொல்கிறார் மனோஜ் பாஜ்பா யான ஒரு பெண்ணை நிஜம் என நினை இருந்து மீண்டு சிகிச்சை பெற்று வந்த ம இதுவும் கற்பனைதான் எனச் சொல்கிறா ராதிகா. ஆனால், யார் சொல்வது உண்மை... யார் கற்பனை? என்ற ட்விஸ்ட்டோடு முடிகிறது இந்த 18 நிமிட த்ரில்லர்.

## இலியானாவுக்கு டும் டும்



"கேடி" என்ற படத்தில் அறிமுகமான நடிகை இலியானா, தெலுங்கில் பிரபல நடிகையாக விளங்கி வருகிறார். இளையதளபதி விஜய் நடித்த "நண்பன்" படத்தில் நாயகியாக நடித்த இவருக்கும் அவுஸ்திரேலியாவை சேர்ந்த புகைப்பட கலைஞர் ஆண்ட்ரு என்பவருக்கும் இடையே நிச்சயதார்த்தம் நடைபெற்றுள்ளதாகவும், விரைவில் இருவருக்கும் திருமணம் நடைபெறவுள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளது. இலியானா தற்போது புதிய படங்களை ஒப்புக்கொள்ள மறுத்து வருவதால் திருமணத்திற்கு பின்னர் அவர் நடிக்க மாட்டார் என்று கூறப்படுகிறது. மும்பையில் உள்ள நட்சத்திர ஓட்டலில் இலியானா திருமணம் நடைபெறவுள்ளதாகவும் விரைவில் திருமணத் திகதி முறைப்படி அறிவிக்கப்படும் என்றும் இலியானாவின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

## ஆசைப்படாத கீர்த்தி



சமீபத்தில் 'இந்திப் படங்களில் நடிக்க உங்களுக்கு ஆர்வம் இல்லையா?' என கீர்த்தி சுரேஷிடம் கேட்டிருக்கிறார்கள். அதற்கு 'இந்தியில் நடிக்கும் ஆசை எனக்கில்லை. நயன்தாரா பாணிதான் என் பாணி. அவர் தென்னிந்தியாவில் எவ்வளவு பெரிய நடிகை. அவரே இந்தியில் நடிப்பதில்லை. இருக்கிறதை விட்டுவிட்டுப் பறக்கும் ஆசை எனக்கில்லை' என்கிறார்.

## "கபாலி" கிரெடிட் காட்



ரஜினிகாந்த் "கபாலி" உருவத்தை கிரெடிட் காட்களில் அச்சிட்டு சிட்டி பேங்க் வங்கி அவரைக் கௌரவித்துள்ளது. ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகியிருக்கும் "கபாலி" திரைப்படம் விரைவில் வெளியாகவிருக்கிறது. இதனையொட்டி ஏர் ஏசியா விமானம் ஏகப்பட்ட சலுகைகளை பயணிகளுக்கு வழங்கியுள்ளது. மேலும் 6 மாத காலம் "கபாலி" விளம்பரங்களைத் தாங்கி ஏர் ஏசியா விமானம் பறக்கவுள்ளது. இது தவிர கேட்பரி, அமேசான், விளஸ் ஹாஸ்பிடல்ஸ், ஏர்டெல் போன்ற நிறுவனங்களும் கபாலி விளம்பர தூதர்களாக மாறியுள்ளன. டீரல வுஉைமநவள இந்நிலையில் வாட்ஸ் ஆப் நிறுவனம் ரஜினியின் "கபாலி" உருவத்தை எமோடிக்கானாக வைத்துள்ளது. இந்தியாவில் 35 கோடிக்கும் அதிகமான மக்கள் தினசரி வாட்ஸ் ஆப் பயன்படுத்துகின்றனர். இதனால் கபாலியின் புகழ் மேலும் பரவி வருகிறது. தற்போது பிரபல வங்கிகளில் ஒன்றான சிட்டி பேங்க் நிறுவனமும் "கபாலி" விளம்பரத்தில் குதித்துள்ளது. சிட்டி பேங்க் நிறுவனம் "கபாலி" கிரெடிட் காட்களை தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் கிரெடிட் காட்களிலும் ரஜினி வலம் வருகிறார். இதுவரை எந்த ஒரு படத்திற்கும் இந்த மாதிரியான விளம்பரங்களை யாரும் செய்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் முத்தழகு



மலையாளத்தில் சூப்பர் ஹிட்டடித்த 'புதிய நியமம்' படத்தைத் தமிழில் ரீமேக் செய்கிறார்கள். சமூகத்துக்குத் தேவையான விழிப்புணர்வுடன் கூடிய பழிவாங்கல் கதையான இந்தப் படத்தில் நாயகியின் கதாபாத்திரம் மிகவும் முக்கியமானது. முக்கியத்துவம் வாய்ந்த நயன்தாரா நடித்த ஹீரோயின் ரோலில் பிரியாமணி நடிக்கிறாராம். மம்முட்டி ஹீரோவாக நடித்த இந்தப் படத்தில் நடிக்க முன்னணி நடிகர்கள் சிலருடன் பேசி வருகிறார்களாம். திருமணத்துக்கு முன்பாகவே இந்தப் படத்தை முடித்துக் கொடுக்க பிரியாமணி திட்டமிட்டிருக்கிறாராம்!



## ஜி.வியை கழற்றிவிட்ட விஜய்

எல். விஜய் தான் முதலில் இயக்கிய "பொய் சொல்லப் போறோம்" படத்தைத் தவிர அனைத்து படங்களுக்கும் ஜி. வி. பிரகாஷையே இசையமைப்பாளராகப் பயன்படுத்தினார். ஆனால் அடுத்து ஜெயம் ரவியை வைத்து தான் இயக்கப்போகும் படத்துக்கு ஜி.வி.பிரகாஷை கழற்றி விட்டுவிட்டு ஹாரிஸ் ஜெயராஜ்'டன் கைகோர்த்துள்ளார். காரணம் ஜி.வி.பிரகாஷ் இப்போது அதிகம் படங்களில் நடிப்பதிலேயே கவனம் செலுத்துவதால் சிரத்தை எடுத்து இசையமைப்பதில்லை. எனவே ஒவ்வொரு இயக்குனராக ஜி.வி.பிரகாஷை கழற்றி விடுகிறார்கள். வெற்றி மாறனைத் தொடர்ந்து அந்த வரிசையில் விஜய்யும் இணைந்துள்ளார்.




## த்ரிஷாவின் 'மோகினி'



கோலிவுட்டில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக கொடி கட்டி பறந்து வரும் த்ரிஷா தற்போது தனுஷ்'டன் "கொடி", திகில் படமான "நாயகி", இன்னொரு திகில் படமான "மோகினி" "போகி" ஆகிய படங்களில் நடித்து வருகிறார். மேலும் பாலிவுட்டில் சூப்பர் ஹிட் ஆன "குவீன்" படத்தின் தமிழ், ரீமேக்கில் நடிக்கவுள்ளார். அவர் நடித்து வரும் "மோகினி" படத்தின் படப்பிடிப்பு தற்போது இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது. இந்த படத்தில் த்ரிஷா கேட்டரிங் வல்லுனராக நடித்து வருவதாகவும், வேலை நிமித்தமாக லண்டன் செல்லும் த்ரிஷாவை ஒரு பேய்பிடித்து விடுவதாகவும் அதன் பின்னர் ஏற்படும் பிரச்சினைகளை திகில் மற்றும் காமெடி கலந்து இயக்குனர் மாதேஷ் கொடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. கேட்டரிங் வல்லுனர் பாத்திரத்திற்காக லண்டனில் த்ரிஷா உண்மையான கேட்டரிங் ஸ்பெஷலிஸ்ட்களிடம் சில நாட்கள் பயிற்சி பெற்றதாகவும் இதன் மூலம் அவர் புதுப்புது மெனுக்களை சமைக்கவும் கற்றுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.




# லிப்ஸ்டிக் போடுவதற்கு முன்பு....



பொதுவாக லிப்ஸ்டிக் போடுவதற்கு முன் தேங்காய் எண்ணெயை உதடுகளில் தடவி பத்து நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான வெந்நீரில் துணியை நனைத்து உதடுகளைத் துடைத்த பின்னர் லிபஸ்டிக் போடு வது நன்று. அதிக குளிரும் சரி அதிக வெயிலும் சரி லிப்டுக்குகளுக்கு எதிரிகள். குாரணம் உதடுகள் எளிதில் வரண்டு விடும்.

ஒரு லிப்டிக்கை ஆறு மாதங்களுக்கு மேலாக பாவித்தல் கூடாது. இது உதடுகளின் தன்மையை பாதிக்கும். லிப்ஸ் டிக் உபயோகித்தபின் உதடுகளால் ஈரப்படுத்துவதையும் நீராகாரங்கள் உண்பதையும் தவிர்த்தல் வேண்டும்.

லிப்ஸ்டிக் போடுவதற்கு முன்பு லிப் பென்சிலால் லிப்ஸ்டிக் போட வேண்டிய பகுதிகளில் அவுட்லைன் போட வேண்டும். மேலிதான உதடுகள் கொண்டவர்கள் உதடுகளுக்கு வெளிப்பகுதியாக அவுட் லைன் போட வேண்டும். தடித்த உதடுகள் கொண்டோர் உதடுகளின் உட்பகுதியில் அவுட்லைன் வரைந்து கொள்வது நல்லது.

இரவு படுக்கச் செல்வதற்கு முன்பு வாஸலின் தடவிக் கொள்ளலாம். லிப்ஸ்டிக் போடுவதற்கு முன்பு வாஸலின் தடவிக் கொண்டாலும் உதடுகள் பளபளக்கும்.

அதிகமாக லிப்ஸ்டிக் போட்டுக் கொண்டு விட்டால் ரிஸ்யூ பேப்பர் கொண்டு ஒத்தி எடுப்பது நல்லது. துணிகளாலும் கைகளாலும் துடைப்பதைத் தவித்தல் வேண்டும்.

வெள்ளை நிறப் பெண்கள் ஒரேஞ், சிவப்பு, பிரௌன் போன்ற நிறங்களில் லிப்ஸ்டிக்கைத் தெரிந்தெடுக்கலாம். மாநிறமான பெண்கள் லைட் பிறவுண் மற்றும் லைட் செர்ரி நிறங்களைக் கொண்ட லிப்ஸ்டிக்குகளை தெரிந்தெடுக்கலாம். பகல் நேரத்தில் இள நிறத்திலும் மாலை நேரங்களில் அடர் நிறங்களிலும் லிப்ஸ்டிக்கை உபயோகியுங்கள்.



உப்பு கலந்த வெந்நீரில் சோயா உருண்டைகளை (சோயா சங்க்ஸ்) போட்டு மூடி வைக்கவும். அரை மணி நேரம் கழித்து நன்கு பிழியவும். பின்னர் மிக்ஸியில் சேர்த்து சுற்றினால் உடனே பூப்பூவாக உதிரும். இதை வெயிலில் நன்றாக காயவைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். எந்தப் பொரியல் செய்தாலும் இறக்குவதற்கு முன்னால் தேங்காய்க்குப் பதில் இந்த சோயா பொடியைத் தூவி இறக்கவும். சுவையும், வாசனையும் அதிகரிப்பதுடன், புரதச் சத்தும் கிடைக்கும்.

புடவையை இறுக்கிக் கட்டுவதால், இடுப்பில் சிலருக்கு புண்ணாகிவிடும். கடுக்காயை சந்தனக்கல்லில் உரசித் தடவி வந்தால், புண் குணமாகும்.

குலோப் ஜாமுன் பாகில் ஒரு ஸ்பூன் தேன் விட்டு இறக்கினால் பாகு உறையாமல் இருப்பதுடன் சுவையும் கூடுதலாக இருக்கும்.

# தலைமுடி உதிர்கின்றதா?

ஆண், பெண் என இருபாலரும் வருத்தம் கொள்ளும் ஓர் விஷயம் தலைமுடி உதிர்வது. இப்படி தலைமுடி உதிர்வதற்கு ஏராளமான காரணங்கள் உள்ளன. அதில் ஒன்று தான் ஹெல்மட் அணிவது. அது மட்டுமின்றி, ஹெல்மட் கட்டாயம் அணிய வேண்டுமென்ற சட்டமும் உள்ளது.

ஹெல்மட்டை நீண்ட நேரம் அணிவதால் தலையில் வியர்வை அதிகரித்து, மயிர் கால்கள் வலிமையிழப்பதோடு, ஸ்கால்ப் ஆரோக்கியத்தை இழந்து, அதிகம் உதிர ஆரம்பிக்கும். எனவே முடி உதிர்வதைத் தடுக்க நாம் ஏதேனும் ஒரு துணியை தலையில் கட்டிக் கொண்டு பின் ஹெல்மட் அணிவோம்.

இருப்பினும் இது மட்டும் போதாது. ஒருசில பராமரிப்புக்களையும் தலைமுடிக்கு கொடுக்க வேண்டியது அவசியம். இங்கு ஹெல்மட் அணிவதால் ஏற்படும் தலைமுடி உதிர்வதைத் தடுக்க சில அற்புத வழிகள் கொடுக்கப்பட்டுள்ளன

## எலுமிச்சை

எலுமிச்சை ஸ்கால்ப்பில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வளிக்கும் பொருள். எனவே வாரத்திற்கு 1 முறை எலுமிச்சை சாற்றினை நீரில் கலந்து, அதனைக் கொண்டு ஸ்கால்ப்பை அலசி, நன்கு உலர வைத்து, பின் ஸ்கால்ப்பில் எண்ணெய் தடவ வேண்டும். இப்படி செய்வதால் ஸ்கால்ப்பின் pH அளவு சீராக பராமரிக்கப்பட்டு, ஸ்கால்ப் ஆரோக்கியமாக இருக்கும்.

## வினிகர்

நீண்ட நேரம் ஹெல்மட் அணிவதால் தலைமுடி பொலிவிழக்க ஆரம்பிக்கும். எனவே முடியின் பொலிவை அதிகரிக்க ஆப்பிள் சீடர் வினிகரை நீரில் கலந்து, அந்நீரால் தலைமுடியை அலசுங்கள். இதன் மூலம் தலைமுடியின் பொலிவு அதிகரிப்பதோடு, தலைமுடி உதிர்வதும் தடுக்கப்படும்.

## வெங்காய சாறு

வெங்காய சாற்றினை ஸ்கால்ப்பில் படும் படி தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் மைல்டு ஷாம்பு போட்டு அலச வேண்டும். இப்படி வாரம் ஒருமுறை செய்து வந்தால், தலைமுடி உதிர்வதைத் தடுக்கலாம்.



## பாதாம் எண்ணெய்

பாதாம் எண்ணெய் கொண்டு வாரத்திற்கு இரண்டு முறை மசாஜ் செய்து நன்கு ஊற வைத்து அலச, அதில் உள்ள வைட்டமின் ஈ தலைமுடியின் மென்மை, வலிமை மற்றும் பொலிவு அதிகரிக்கும்

## கற்றாழை

கற்றாழை ஜெல் கூட தலைமுடி உதிர்வதைத் தடுக்கும். அதற்கு கற்றாழை ஜெல்லை ஸ்கால்ப்பில் படும்படி நன்கு தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரால் அலசி, உலர வைக்க வேண்டும். இந்த முறையை மேற்கொள்ளும் போது ஷாம்பு பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இம் முறையை வாரத்திற்கு 2 முறை பின்பற்றினால், தலைமுடி உதிர வது குறைந்து, முடியின் ஆரோக்கியமும் மேம்படும்.

## பூண்டு

வாரம் ஒருமுறை பூண்டினை தேங்காய் அல்லது நல்லெண்ணெயில் தட்டிப் போட்டு சூடேற்றி, பின் அந்த எண்ணெயால் ஸ்கால்ப்பை மசாஜ் செய்து, மைல்டு ஷாம்பு போட்டு அலசி வர, தலைமுடியின் வளர்ச்சி தூண்டப்பட்டு, முடியின் வலிமையும் அதிகரிக்கும்.

## கறிவேப்பிலை

கறிவேப்பிலையை தேங்காய் எண்ணெயில் போட்டு சூடேற்றி இறக்கி, சிறிது நேரம் ஊற வைத்து, பின் அந்த எண்ணெயை வடிகட்டி அதனைக் கொண்டு தலையை நன்கு மசாஜ் செய்து 15 நிமிடம் ஊற வைத்து பின் அலச வேண்டும். இப்படி வாரத்திற்கு 2 முறை செய்து வர நல்ல மாற்றத்தைக் காணலாம்.

## முட்டை கண்டிஷனர்

ஒரு முட்டையின் வெள்ளைக்கருவை பௌலில் உடைத்து ஊற்றி, அத்துடன் 1 டேபிள் ஸ்பூன் எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து, அதனை ஸ்கால்ப்பில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து, பின் அலச தலையில் உள்ள அழுக்குகள் அனைத்தும் நீங்கி, முடியின் வலிமை அதிகரித்து, முடி உதிர்வது தடுக்கப்படும்.

# வெள்ளெழுத்து



வெள்ளெழுத்து (Presbyopia) ஒரு நோயல்ல. இயற்கையில் நிகழ்கின்ற ஒரு பிழை. நாம் வானத்தின் நட்சத்திரத்தையும் பார்த்துவிட்டு உடனே கையில் இருக்கும் புத்தகத்தையும் படிக்க முடிகிறதென்றால், அதற்கு நம் லென்ஸின் மீள்திறன் (Elasticity) தான் காரணம். ஆனால், வயதாக ஆக லென்ஸ் கடினமாகிவிடுவதால், மீள்திறன் குறைந்து இந்த வேலையைச் செய்ய முடியாமல் போகிறது. இதனால் நாற்பது வயதில் செய்தித்தாள் படிப்பது சிரமமாகிறது. இதுதான் வெள்ளெழுத்து. இதை சரிசெய்ய 'ரீடிங் கிளாஸ்' எனும் குவிலென்ஸ் உடைய கண்ணாடியை அணிந்துகொள்ள வேண்டும். ஏற்கனவே கண்ணாடி அணிந்துள்ளவர்கள் தூரப் பார்வைக்கும் படிப்பதற்குமாக பைபோக்கல் கண்ணாடி அணிந்து கொள்ளலாம்.

மேற்சொன்ன நான்கு கோளாறுகளுக்கும் இப்போது கண்ணாடி அணிந்து கொள்வதற்குப் பதிலாக கொன்டாக்ட் லென்ஸ் அணிந்துகொள்ளலாம். கண்ணில் லென்ஸ் போட்டுள்ளது வெளியில் தெரியாது. முக்கியமாக பெண்களின் கண் அழகைப் பாதுகாக்க கொன்டாக்ட் லென்ஸ் உதவுகிறது. சமீபகாலமாக இதையும் தாண்டி, லேசர் சிகிச்சை மூலமும் இவற்றைக் குணப்படுத்த முடிகிறது.

## போட்டிச் சிறுகதை 9



பெயர் : ஏ.ஜே. ஞானேந்திரன்
முகவரி : அருளகம் ஆர்க்லேன், உடுவில் கிழ., சுன்.
சிறுகதை : கொக்கரக்கோ

கோழி முட்டை சாப்பிடுவது அவனுக்கு மிகவும் பிடிக்கும். பொரித்தோ அவித்தோ முட்டையை ரசித்து ருசித்துச் சாப்பிடுவான் திலகன். இடையிடையே அம்மா வைக்கும் முட்டைக்கறியின் சுவையில் அவன் தன்னையே மறந்து விடுவதுண்டு.

சரி எல்லாம் இருக்கட்டும். திலகன் ஒரு முட்டைப் பிரியன் என்பது நன்றாகவே தெரிகின்றது. ஆனால் இந்த முட்டைகளை விரும்பிச் சாப்பிடும் திலகனுக்கு கோழிகளையோ சேவல்களையோ ஏன்அடியோடு பிடிப்பதில்லை?

இரண்டும் இல்லையென்றால் முட்டையே இல்லை என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். என்றாலும் அம்மா நான்கு பெட்டைக் கோழிகளையும் ஒரு சேவலையும் அவற்றின் இஸ்டத்திற்கு முற்றத்தில் மேய விடுவது திலகனுக்குப் பிடிப்பதில்லை.

முற்றமெல்லாம் கோழிகள் தங்கள் கழிவுகளை அகற்றி விட்டுச் செல்வதுதான், கோழிகள் மீதான கோபத்திற்குக் காரணம். என்ன செய்வது? தின்னும் முட்டைகளுக்காக கோழிகளை அவன் சுதந்திரமாக நடமாட விட்டிருந்தான்.

அவற்றைக் கொல்ல வேண்டும் என்று தனக்கு இடையிடையே வரும் கொலை வெறியையும் அடக்கிக் கொண்டான்.

முட்டையிலிருந்து கோழியா அல்லது கோழியிலிருந்து முட்டையா என்று பழைய கதையைக் கிளறாமல், ஒன்றில்லை என்றால் இன்னொன்று இல்லை என்பது மட்டும் அவனுக்குத் திடமாகத் தெரிந்தது.

அவன் குடும்பத்தில் நான்கு பிள்ளைகள். 15 வயதாகும் இவன் இன்னமும் படித்துக் கொண்டிருக்கிறான். பத்து வயதாக இருக்கும்போதே தன் அப்பாவை மாரடைப்பு காரணமாக இழந்த துரதிஷ்டசாலி . அவன் மாமா தான் அவர்களுக்கு பலவழிகளிலும் உதவி செய்து கொண்டு வருகின்றார்.

35 வயதாகி விட்ட அக்கா கமலம் இது வரையில் கல்யாணமாகமலே வீட்டோடு இருக்கிறாள். பட்டதாரி. ஆங்கில ஆசிரியையாக இவளுக்கு வேலை கிடைத்திருக்கின்றது. வருகிற வரன் களையெல்லாம் ஆயிரத்தெட்டுக் கார ணங்கள் சொல்லித் தட்டிக் கழித்து அவள் வயதும் முப்பதைத் தாண்டி விட்டது. கமலத்திற்கு இளையவர்களான அவனது இரு அக்காமார் திருமணமாகி ஆளுக்கு இரண்டு பிள்ளைகளையும் பெற்றுக் கொண்டு விட்டார்கள்......

அவன் வகுப்புகளுக்குப் போய்விட்டு, சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வீடு திரும்பியபோது, அவன் அக்காள், தான் கழுவிய உடைகளை கொடியில் காயப் போட்டுக் கொண்டிருந்தாள்.

திலகனைக் கண்ட குஷியிலோ தெரியவில்லை. முற்றத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு கோழி மெல்லத் தன் கழிவை அகற்றி விட்டு சிறகைப் படபடவென அடித்தது. தூரத்திலிருந்து சேவல் ஓடிவந்து கோழியை ஆக்ரோஷமாக ஏறி மிதித்து விட்டு, பலமாகக் குரலெடுத்துக் கூவியது .

சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு, ஒரு கல்லை எடுத்து கோழி மீதும், சேவல் மீதும் எறிய வேண்டும் என்ற ஆத்திரம் அவனுள் மேலிட்டது. ஆனால் மதியச் சாப்பாட்டுடன் கிடைக்கும் முட்டைப் பொரி யலை நினைத்துக் கொண்டு, தன் வழமையான கொலை வெறியை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான் திலகன்.....

"வீட்டுக்காரர்...."

யாரோ ஒருவர் வீட்டு வாசலில் நின்று கூப்பிடுவது கேட்டு , அவன் வீட்டு கேட் பக்கம் திரும்பினான்.


"இங்க கோழி விக்க இருக்கே...?"

திலகன் பதில் சொல்ல முன்பு முற்றத்திற்கு வந்த அம்மா வந்தவரை உள்ளே அழைத்தாள்.

"வாங்க தம்பி.. ஒரு கோழி இருக்கு...."

திலகனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அம்மா கோழியை விற்கப் போகிறாளா?

அதே நேரம் அவனுக்கு மாமா முறையான சிவகடாட்சம் வந்தவரை அழைத்துக் கொண்டு உரிமையோடு "உள்ளே வாங்க தம்பி.. கோழி இருக்கு... நல்ல விலைக்குத் தரலாம்.." என்றபடி உள்ளே நுழைந்தார்.




திலகனுக்கு ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியம். அம்மா கோழியை விற்கப் போகிறாள் என்று காதில் விழுந்த செய்தி முதல் ஆச்சரியம். கோழி வாங்க வந்தவரை கையைப் பிடித்து உரிமையோடு மாமா வீட்டுக்குள் வரவழைத்து, உட்கார வைப்பது இன்னொரு ஆச்சரியம்.

"தம்பி இரும்.. வாறன்" என்று சொல்லி விட்டு சிவகடாட்சம் பார்வதியை அடுக்களைக்குள் அழைத்துச் சென்றார்.

பார்வதியும் குழப்பத்தோடு சிவகடாட்சத்தைத் தொடர்ந்தாள்.

அவசரமாக அவர்களைத் தொடர்ந்த திலகனுக்கு சட்டென இருவரும் வெளியே வந்தபோது அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதைக் கேட்டறிய முடியாதது உப்புக் குறைவான முட்டைக் கறியைச் சாப்பிட்டது போன்ற சப்பென்ற உணர்வைத் தந்தது.

முட்டை போடுவது குறைவாகி விட்டதால், இருப்பதில் ஒன்றை விற்றுவிட்டு, மேலும் இரண்டு கோழிகளும் ஒரு சேவலும் அம்மா வாங்கி முற்றத்தில் மேயவிடப் போகிறாள் என்ற தகவலை திலகன் அறிய நியாயமில்லை.

அட கோழி வாங்க வந்தவரை உட்கார வைத்து எதற்கு கூல்ரிங்கும், பலகாரமும் கொடுக்கின்றார்கள் என்று குழம்பியபடி அவன் உடைமாற்ற தன் அறைக்குள் சென்றான்... அக்காளிடமும் கேட்க முடியாது. அவள் சிடுமூஞ்சி. உனக்கெதற்கு அதெல்லாம் என்று எரிந்து விழுவாள்..

.....கோழி வாங்க வந்த வசீகரன் திலகனை விட நன்றாகக் குழம்பிப் போயிருந்தான். தான் கோழி வாங்க வந்த இடத்தில் முன் பின் தெரியாத எனக்கு ஏன் இத்தனை உபசாரம் என்று அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. தன்னை உட்கார வைத்து சுகம் விசாரித்து, குடும்ப நலன் விசாரித்து, பலகாரமும் கூல்ரிங்கும் தந்து கோழியோடு அனுப்பியபோது அவன் நன்றாகவே குழம்பி விட்டான். கோழிக்கு அதிக பணமும் வாங்கவில்லை.

அட இந்த ஊரில் கோழி வாங்க வருபவர்களுக்கு இப்படியொரு ராஜ உபசாரமா என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். முதலில் முற்றத்துக் கொடியில் உடுப்புக் காயப் போட்டுக் கொண்டிருந்த கமலத்தை நேரில் பார்த்தபோது, வசீகரமான அழகிதான் என்று வசீகரன் நினைத்துக் கொண்டான். கதவிடுக்கில் இரகசியமாக தன்னை அவள் பார்த்துக் கொண்டிருந்தபோது, அவனை அறியாமல் அவளில் ஒரு ஈர்ப்புத் தோன்றுவதை அவன் உணர்ந்திருந்தான்.

இங்கேதான் வாசகர்கள் குழப்பத்தைத் தீர்க்க வேண்டி இருக்கின்றது.

வசீகரன் இருபது வருடங்களுக்கு மேலாக இலண்டனில்தான் வசித்து வருகின்றான். பல இடர்களுக்கு முகம் கொடுத்த முடிவில் 2013 இல் தான் அவனுக்கு இங்கிலாந்தின் பிரஜாவுரிமை கிடைத்தது. தனது 25 ஆவது வயதில் அப்பா, தொடர்ந்து அம்மா என்று இருவரையும் இழந்து விட்ட துரதிஷ்டசாலி இவன். பிறகு ஒரு விபத்தில் சிக்கியதால், வேலை செய்ய முடியாமல் ஐந்து வருடங்கள் அநியாயமாகக் கழிந்தன.

தான் இன்னமும் கட்டைப் பிரமச்சாரி என்ற உண்மை உறைத்தபோது அவனுக்கு வயது நாற்பதாகி விட்டது. இனியும் திருமணமாகாது விட்டால் வாழ்வின் பிற்பகுதி பெரும் சிக்கல்கள் கொண்டதாக இருக்கும் என்பது அவனுக்கு நிதர்சனமாகத் தெரிந்தது.

அவன் ஒரு தீர்மானத்திற்கு வந்து. முதல் கட்டமாக தன் வேலையை ராஜிநாமா செய்தான். யாழ்ப்பாணம் சென்று எப்படியாவது ஒரு பெண் தேடுவது என்ற முடிவோடுதான் இவன் யாழ் பயணம் தொடங்கியது. ஒரு வருடமாவது அங்கு நின்று ஒரு பெண்ணைத் துணைவியாகத் தேடிவிட்டுத்தான் இலண்டன் திரும்புவது என்பது அவன் திட்டம். வேலை இதற்கு இடையூறு. எனவே மனேஜரிடம் உண்மையான காரணத்தை நேரில் விளக்கிய பின்னரே எழுத்தில் தன் இராஜிநாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்திருந்தான்.

அவனது நேர்மை அவனுக்குப் பரிசளிக்கத் தவறவில்லை.

ஒரு வருடத்தில் திரும்பி வந்தால் வேலை மீண்டும் தரப்படும் என்று நிர்வாகம் அறிவித்தபோது, அவன் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தான். பொய்யை மெய்யாக்க ஆயிரம் பொய் சொல்லாமல், உள்ளதை உள்ளபடி சொன்னதால், அவனுக்கு யோகம் அடித்திருக்கின்றது. 12 மாதகால அவகாசத்தில் ஒரு பெண்ணைத் தேடிவிட வேண்டும்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் அவனுடன் ஒன்றாகப் படித்த குபேரன் அவனுக்கு இந்த விடயத்தில் உதவுவதாக வாக்களித்து தன் வீட்டில் தங்க ஓர் அறையும் கொடுத்திருந்தான் அந்த நல்ல மனம் கொண்ட பாடசாலைத் தோழன்.

8 மாதங்கள் கழிந்தும் அவர்கள் பெண் வேட்டை எந்த வழியிலும் பலன் கொடுக்காதது இருவருக்குமே ஏமாற்றமாக இருந்தது.

(தொடர்ச்சி 15 இல்;)

இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.

### சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 9

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..............................

சிறுகதையின் இலக்கம் : ..............................

எழுதியவர் பெயர் : ..............................

சிபார்சு செய்பவர் பெயர் : ..............................

முகவரி : ..............................

தொலைபேசி இலக்கம் : ..............................

.............................. ஆகிய நான்

இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

..............................

ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி

**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**



# லேடி சூப்பர் ஸ்ரார் நயன்தாரா

நயன்தாரா நவம்பர் 8, 1984 இல் பிறந்தார். இயற்பெயர் - டயானா மரியா குரியன். 2003 ஆம் ஆண்டு மன சினகாரே என்ற மலையாள மொழித் திரைப்படம் மூலம் திரைப்படத்துறைக்கு அறிமுகமான நயன்தாரா, 2005 ஆம் ஆண்டு "ஐயா" திரைப்படத்தின் மூலம் தமிழ்த் திரைப் படத் துறைக்கு அறிமுகமானார். 2015 ஆம் ஆண்டு தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட இவரது திரைப்படங்கள் அனைத்தும் வெற்றி பெற்றதால் பத்திரிகைகள் இவரை லேடி சூப்பர் ஸ்டார் எனப் பாராட்டின.

நேற்றுவரை சர்ச்சையில் சிக்கிய தமிழ் நடிகைகள் முகவரி இல்லாமல் காணாமல் போயிருக்கிறார்கள். 'ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி' மாதிரி சிம்பு, பிரபு தேவா, ஆர்யா என்று ஏகப்பட்ட ஹீரோக்களிடம் உருகி, பழகி, விலகி வந்தவர் நயன் தாரா. இப்போது இயக்குனர் விக்னேஷ் சிவனுடன் கிசுகிசுக்கப்படுகிறார்.

ஆயிரத்தெட்டு சர்ச்சைகளில் மாட்டினாலும் அபூர்வ பெண்மணியாக இருக்கிறார். தமிழ்சினிமாவரலாற்றில் ஒரு நடிகை காதல் விவகாரத்தில் சிக்கினால் கதை அம்பேலாகி காணாமல் போய்விடுவார்.

'இனிமே இவ நம்மாளு இல்லை, அவரோட ஆளு' என்று அந்த நடிகையின் மார்க்கெட் தடாலடியாக சரிந்துவிடும். இதுதான் தமிழ்சினிமா இதுகாறும் கண்டுவரும் உண்மை. இதற்கெல்லாம் மாறாக, விதிவிலக்காக சர்ச்சையில் சிக்கச்சிக்க நயன்தாராவின் பாப்புலாரிட்டி பவர் எகிறிக் கொண்டே செல்கிறது.

இப்போது இரண்டரை கோடி சம்பளம் வாங்கும் நம்பர் ஒன் நடிகையாக இருக்கிறார், நயன்தாரா.

காதல் விவகாரத்தில் நயன்தாரா எப்படியோ.. அது காதலித்தவர்களுக்குத்தான் தெரியும். ரஜினி, விஜய், அஜித், சூர்யா, சிம்பு, தனுஷ், விஷால், ஜெயம் ரவி என பல முன்னணி கதாநாயகர்களுடன் நடித்த பெருமைகொண்ட நடிகை நயன்தாராவின் காதல் வாழ்க்கை என்பது கொஞ்சம் கசப்பானவை தான்.

ஆனால் மனித நேயத்தில் நயன்தாராவை விஞ்ச யாருமே இல்லை. 'வில்லு' படத்தில் நடித்துக்கொண்டு இருந்தபோது திடீரென அங்கிருந்த ஒரு டெக்னீஷியனுக்கு இதயவலி வந்துவிட துடிதுடித்துப் போனார் நயன்.

உடனடியாக அப்பல்லோ ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சைக்கான முழுப் பணத்தை தானே கட்டி, அவரது உயிரைக் காப்பாற்றினார்.

தனக்கு உதவியாக இருந்து அழகுபடுத்தும் ஒரு உதவியாளருக்கு கோயம்பேடு பேருந்து நிலையம் எதிரிலுள்ள பிரம்மாண்ட அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு ஃப்ளாட்டை இலவசமாய் வாங்கிக் கொடுத்தார். 'கையெல்லாம் வசியக் கயிறு தொங்க' நன்றி சொல்லிக் கொண்டே இருக்கிறாராம் அந்த உதவியாளர்.

புத்தகப்புழுவாக இருக்கும் பழைய நடிகரின் பெயரைக் கொண்ட ஒருவர் இருக்கிறார். பிரபுதேவாக்கு நெருக்கமான நண்பர். பிரபுதேவாவும், நயன்தாராவும் காதல் வானில் சுற்றித்திரிந்தபோது நயன்தாராவின் கோல்ஷீட் விவகாரங்களை கவனித்துக் கொள்ள பிரபுதேவாவால் அந்த நண்பர் நியமிக்கப்பட்டார். ஒரு கட்டத்தில் நயன்தாரா, பிரபுதேவாவுக்கு பிரிவு ஏற்பட்ட தருணத்தில் அந்த நண்பர் பிரபுதேவா பக்கம் போகாமல் நயன்தாராவுக்கு பக்கபலமாக இருந்தார். நடிகைக்கு பைனான்ஸ் நெருக்கடி ஏற்பட்டபோது தோள்கொடுத்து உதவினார்.

சமீபத்தில் விஜயசாந்தி நடித்த 'வைஜெயந்தி ஐ.பி.எஸ்' ஸ்டைலில் ஒரு கதையை புதுமுக இயக்குனர் ஒருவர் சொன்னார். அந்தக் கதை நயன்தாராவுக்கு மிகவும் பிடித்துப் போனது. ஹீரோ டம்மியான அந்த படத்தில் நடிக்க தாராவுக்கு ஆசை. கதையை கேட்டு முடித்த நயன்தாரா, அருகில் நின்ற பழைய நடிகர் பெயரைக்கொண்ட அந்த நண்பரை அழைத்தார். 'நீங்கதான் இந்த படத்தை தயாரிக்கிறீங்க, நான்தான் நடிக்கிறேன் ஓ.கே-வா' என்று சொல்ல அவருக்கு சந்தோஷ ஷாக். 'மேம்...' என்று தழுதழுத்தகுரலில் நெகிழ்ந்துபோயிருக்கிறார்.

இத்தனை நல்ல உள்ளம் இருப்பதாலோ என்னவோ இவர் செலெக்ட் செய்யும் கதா பாத்திரங்களின் புகழ் பாலிவுட்வரை பரவுகிறது!



# தேனீ டான்ஸ்

தேனீக்கள் அடிக்கடி டான்ஸ் ஆடுமாமே? உண்மையா?

டான்ஸ் என்றவுடன் பரத நாட்டியம், பாலே, டிஸ்கோ மாதிரி தேனீக்கள் ஆட்டம் போடுவதில்லை. வட்டம், அரை வட்டம் என சிறு சிறு இயக்கங்கள் செய்வதைத்தான் தேனீக்கள் டான்ஸ் ஆடும் என்று கூறுகிறார்கள்.

இந்தக் குட்டி டான்ஸ்கூட, பொழுதுபோக்குக்காக அல்ல, தகவல் பரிமாற்றத்துக்காகத்தான்.

சில அசைவுகள் மூலம் தேனீக்கள் தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றன.

ஒரு தேனீ, இடது புறத்தில் ஆரம்பித்து சிறிய வட்டமாக ஆடினால், மிக அருகில் எங்கோ தேன் இருக்கிறது என்று அர்த்தம். 8 போல சுற்றிச் சுற்றி ஆடினால், அந்தத் தேனீ வெகுதூரம் பயணப்பட்டுப் போய் வந்திருக்கிறது என்று அர்த்தம்.

அருகில் எந்தப் பூவில் தேன் இருக்கிறது, எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றெல்லாம்கூட தங்கள் தோஸ்துகளின் நடன அசைவை வைத்து தேனீக்கள் கண்டுகொள்கின்றனவாம்.

கூட்டுக்கு மேல் டான்ஸ் ஆடினால், சூரியன் இருக்கும் திசையில் தேன் இருக்கிறது என்று அர்த்தம். தலைகீழாய் திரும்பிக் கொண்டு ஆடினால், சூரியனுக்கு எதிர்த் திசையில் தேன் இருப்பதாக அர்த்தம்.

நிறையப் பூக்கள் இருக்கும் ஏரியாவை ஒரு தேனீ கண்டுபிடித்துவிட்டால், தான் மட்டும் போய் குடி குடி என்று குடித்துவிட்டு வந்து மட்டையாகி விடுவதில்லை தேனீ. ஏரியாவைப் பார்த்ததும் தனது கூட்டுக்குத் திரும்பி வந்து, "ரெண்டு தெரு தாண்டி இருக்குற பரந்த வெளியில் நிறையப் பூக்கள் இருக்கின்றன' என்று மெசேஜ் கொடுப்பதற்காகவும் டான்ஸ் ஆடுகிறது.

தேன் இருக்கும் இடம் எவ்வளவு தொலைவு என்பதைக்கூட டான்ஸ் மூலம் தெரிவிக்கிறது. இரண்டு அரைவட்டம் அடித்து டான்ஸ் ஆடினால் 3 கி.மீ. அளவு தூரம் என்று பொருள். நான்கு அரை வட்டத்துக்கு ஒன்றரை கி.மீ. ஏழு அரைவட்டத்துக்கு 300 மீற்றர். எட்டு அரைவட்டத்துக்கு 200 மீற்றர் என்று ஒரு டேபிள் வைத்திருக்கின்றன தேனீக்கள்.

# சொன்னது பலித்தது



கிளி ஜோசியம், எலி ஜோசியம், கைரேகை ஜோசியம், ஆக்டோபஸ் ஜோசியம் என்று ஆரம்பித்து கம்ப்யூட்டர் ஜோசியம்வரை கடை விரிப்பதைப் பார்த்து விட்டோம். எதிர்காலம் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வம் இல்லாதவர்கள் யார்? அப்படித்தான் இங்கே ஒரு ஜோதிடர் நம் ஆர்வங்களைத் தூண்டுகிறார். அவர், 500 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர். தான் வாழ்ந்த காலத்துக்கு, 1500 வருடங்களுக்குப் பின் என்ன நடக்கப்போகிறது என்பதைக் கணித்துச் சொன்னதாக நம்பப்படுபவர்! அவர் தான், மைக்கேல் டி நாஸ்ட்டராடாமஸ்!

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இவர் இலக்கணம், பேச்சுத் திறன், தர்க்கம், கணிதம், இசை, ஜோதிடக்கலை ஆகியவற்றை இளமையிலேயே கற்றுத் தேர்ந்தார். தன் கணிப்புகளின் மூலமாக, கி.பி. 3797 வரை உலகில் என்ன நடக்கப் போகிறது என்பதைக் கூறியுள்ளார். வழக்கமான ஜோதிட முறைகளுக்கு மாறான தனது கணிப்புகளை, குழப்பமான கவிதை வடிவில் எழுதி இருக்கிறார்.

லண்டனின் மாபெரும் தீ விபத்து, கென்னடி சகோதரர்களின் படுகொலை, ஹிட்லரின் எழுச்சி, நெப்போலியனின் வீழ்ச்சி, அமெரிக்க அதிபராக ஒபாமா வருவது, ஹிரோஷிமா, நாகசாகி அணுகுண்டுப் பேரழிவு, அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல், உலகின் பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட இவரின் கணிப்புகள் பல, வரலாற்றுச் சம்பவங்களுடன் ஒத்துப் போவதாக அவர்கள் சொல்கிறார்கள்.

அது மட்டுமல்ல! "அதி பயங்கரமான வானிலை மாற்றங்களை 21ஆம் நூற்றாண்டில் உலகம் சந்திக்கும் இயற்கைப் பேரிடர்கள், பேரழிவுகள், கடல் கொந்தளிப்புகள் அதிக அளவில் இருக்கும்" என்றெல்லாம் கணித்து வைத்திருக்கிறார். இப்போது இருக்கும் பருவநிலை மாற்றங்களைப் பார்க்கும்போது இது பலித்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுவதில் ஆச்சரியமில்லை!

'சீனாவும் இந்தியாவும் 2030 ஆம் ஆண்டில், உலகின் வல்லரசு நாடுகளாகத் திகழும்'.

'மருத்துவத்தில், 2050 ஆம் ஆண்டில் பெரும் புரட்சி ஏற்படும்.'

'மனிதனின் எல்லா உறுப்புகளையும் விஞ்ஞானத்தில் செயற்கையாக உருவாக்கி விடுவார்கள்!' இவை எல்லாம் நாஸ்டர்டாமஸின் கணிப்புகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, 'கி.பி. 3797 இல் உலகம் அழியும்' என்றும் சொல்லியிருக்கிறார்.

இவையெல்லாம் நடக்குமா என்ன? நாஸ்டர்டாமஸை நம்பலாமா, கூடாதா? ஆனால், படிப்பதற்குச் சுவையாக இருக் கிறது!

கணிப்புகள் பற்றிய 'லெஸ் ப்ரபெடீஸ்' (Les Propheties) என்ற முக்கியமான நூலின் முதல் பதிப்பு 1555ல் வெளியானது. இதில், 353 செய்யுள்கள் இருக்கின்றன.

அதுபோல, எதிர்காலக் கணிப்புகளை 'செஞ்சுரிஸ்' என்னும் புகழ்பெற்ற நூலிலும் குறிப்பிட்டுள்ளார்.




# MS OFFICE இன் பயன்களும் பாவனையும்


(தொடர்ச்சி .....)

இந்த வாரம் நாம் MS Word இன் ஏனைய சில அம்சங்களை பார்க்கலாம்.

ஒரு ஆவணத்தில் எழுதப்படுகின்ற விடயங்களுக்கு மேலதிகமாக சில விசேட குறிப்புக்களை அல்லது விமர்சனக் கருத்துக் களை எவ்வாறு இணைத்துக் கொள்வது.

இந்த விடயத்தில் முக்கியமாக ஆவ ணப் பயன்பாடு எந்தவகையில் உச்ச அளவு பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். ஒரு ஆவணத் தில் சில விடயங்களை விபரிக் கும் பொழுது, அந்த விடயங்களுக்குத் தேவையான மேலதிக குறிப்புக்களை நாம் செருகிக் கொள்ளலாம். இந்த விசேட குறிப்புக்களில் சாதாரணமாக ஒரு ஆவ ணம் எத்தனையாவது தடவையாக மாற்றப் படுகிறது, மாற்றியவரின் பெயர் விபரங் கள் மற்றும் மாற்றப்பட்ட திகதி விபரங் களையும் சேர்த்துக் கொள்ளலாம். இதனை ஆங்கிலத்தில் Comments என்று குறிப் பிடுவார்கள். இப்போது முதலில் எவ்வாறு இந்த சலுகையை பெற்றுக் கொள்வது என்று பார்ப்போம்.

மேல் மூலையில் உள்ள MainMenu தெரிவுகளில் Insert என்ற தெரிவை மேற் கொண்டு அதில் Comments என்ற உப தெரிவை மேற்கொள்ள வேண்டும்.




இது insert ⇨ comments ஐ காட்டுகிறது.

எமக்கு ஒரு ஆவணத்தில் சில குறிப் புக்களை இணைக்க வேண்டுமாயின், மேல் குறிப்பிட்ட வழிமுறையை பின்பற்றலாம். அப் போது செந்நிற கூண்டு ஒன்று வெளிப் படும். அதில் எமக்குத் தேவையான விமர் சனங்களை எழுதலாம். இதனை அழிக்க வேண்டுமாயின், அந்த கூண்டுக்கு அருகில் சென்று, Right click செய்து delete என்ற தெரிவை மேற்கொள்ள வேண்டும்.


இதற்கு மேலதிகமாக நாம் மற்றுமொரு வசதி மூலம் ஒரு ஆவணத்தில் மேற் கொள்ளப்படுகின்ற மாற்றங்களை வேறு நிறத்தில் கோடிட்டு காட்டலாம். அதற்குமேல் மூலையில் உள்ள MainMenu தெரிவுகளில் Tools என்ற தெரிவை மேற்கொண்டு அதில் trackchanges என்ற உபதெரிவை

இதற்கு சுருக்க வழிமுறை ஒன்றும் உண்டு. Ctrl+Shift+E என்பதை பயன் படுத்தலாம். இதன் பிரதான நன்மை என்னவெனில், இந்த ஆவணத்தில் வெவ் வேறு நேரங்களிலும், தினங்களிலும் மேற் கொள்ளப்படுகின்ற மாற்றங்கள் தெளிவாக காட்டப்படுகின்றமை ஆகும். இந்த மாற்றங் கள் comments என்ற வசதிக்கு மேலதிகமாக உள்ள சலுகையாகும்.

ஒரு நிறுவனத்தில் ஆண்டறிக்கை, கணக்காய்வு அறிக்க மற்றும் கணக்கியல் கொடுக்கல் - வாங்கல் அறிக்கைகள் தயாரிக்கப்படும் பொழுது மேற்குறிப்பிட்ட வசதிகள் மிகவும் பிரயோசனமாக அமையும் என்பதில் ஐயமில்லை.



மேற்கொள்ளலாம். இதற்கான விளக்கப்படம் தரப்பட்டுள்ளது.



இங்கு வடக்கு- கிழக்கு என்ற சொற்களை ஆவணத்தில் இணைத்தவருடைய பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. அது 'ரவி' என எழுதப்பட்டுள்ளது. இங்கு சுற்றுலா வனப்புமிக்க வலயங்களாக யால, வில்பத்து, சீகிரிய, பொலன்னறுவை போன்ற பிரதேசங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**உங்களுக்கு கணினி தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.**

yogaraj35@gmail.com

ஜெ.யோகராஜ் (**email : yogaraj35@gmail.com**)

## கார் பயணத்தில் செல்போனா?



கார்களில் பயணிக்கும்போது விபத்துக் களை தவிர்ப்பதற்காக அனேகமானவர்கள் செல்போன்களை பாவிப்பதை பெரிதளவில் விரும்பமாட்டார்கள்.

இதற்காக Hands Free எனும் சாதனம் ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்டிருக்கின் றது. தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக Hands Free ஐ தாண்டி பல அம்சங்க ளைக் கொண்ட சாதனம் ஒன்று உருவாக் கப்பட்டுள்ளது.

ZeroTouch எனும் இச்சாதனத்தை முன்னணி இலத்திரனியல் சாதன வடி வமைப்பு நிறுவனமான Logitech உரு வாக்கியுள்ளது.

இதனை கார்களில் பொருத்தி ஸ்மார்ட் கைப்பேசியினை இணைத்துவிட்டு விசேட அப்பிளிக்கேஷன் ஊடாக திரையில் எவ் வித தொடுகையினையும் செய்யாது செயற்படுத்த முடியும். அத்துடன் குரல் வழி கட்டுப்படுத்தல் ஊடாக Google Maps, Spotify என்பவற்றினையும் கையாள முடியும். இதன் விலை 59.99 அமெரிக்க டொலர்கள்.

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கொக்கரக்கோ...

மீண்டும் மீண்டும் கொழும்பு பயணித்து விசாவைப் புதுப்பித்துக் கொண்டிருந்த வசீ கரனுக்கு எரிச்சலாக இருந்தது. ஓர் இடத் தில் வயதுப் பிரச்சினை, இன்னொரு இடத தில் சாத்திரப் பொருத்தப் பிரச்சினை... இன்னொரு புறம் பிறந்த மண்ணில் அந்நி யனாகி, விசாவுக்காக கொழும்புக்கு ஓடித் திரியும் அவலம்...

கைவசம் இருக்கின்ற வேலையும் பறி போகப் போகின்றது. தேடி வந்த பெண் டாட்டியும் கிடைக்காமல் போகப் போகிறாள் என்று வசீகரன் மனம் நொந்து கொண் டான். நண்பன்தான் அவனை உற்சாகப் படுத்தி பெண் தேடும் வேட்டையை மும்முர மாக்கியிருந்தான்..

இந்த வேட்டையில்தான் 35 வயதான கமலத்தைப் பற்றிய தகவல் அவர்கள் காதில் வீழ்ந்தது. அவன் நண்பன் நம்பிக்கையான இடங்களில் விசாரித்ததில் நல்ல குடும்பம். பொறுப்பு எதுவும் வருகிற மாப்பிள்ளைக்கு இல்லை. பெண் படித்த பட்டதாரி. ஆங்கில ஆசிரியை. அழகி.... மாநிறம் என்ற தகவல்கள் எல்லாம் கிடைத்தன.

பெண்ணின் போட்டோ கிடைத்திருந் தாலும் நேரில் ஒரு தடவை பார்க்க வேண்டும் என்ற சபலம் வசீகரனுக்கு.

அப்படியானால் என்ன செய்வது? ஒரு திட்டம் வகுக்கப்பட்டது...

கொக்குவிலில் கமலத்தின் குடும்பத்தா ரோடு தொடர்புடைய ஒருவரை வசீகரனின் நண்பன் குபேரனுக்குத் தெரியும். வீட்டுக் கோழியை விற்கும் நோக்கம் கமலத்தின் தாய்க்கு இருக்கின்றது. கோழி வாங்கும் காரணத்தோடு வீட்டுப் பக்கம் தலையை நீட்டினால், பெண்ணை நேரில் பார்க்கலாம் என்று குபேரன் காதில் போட்டு வைத்தார் அந்தக் கொக்குவில் நண்பர்.

பெண் வீட்டில் நிற்கிறாள். இப்பொழுது போனால் நேரில் பார்க்கலாம் என்று அவர் போனில் தகவல் தந்த காரணத்தால்தான், தன் பைக்கை எடுத்துக் கொண்டு வசீகரன் குறிப்பிட்ட வீட்டுக்கு கோழி வாங்கப் போயி ருந்தான்.

வசீகரன் குழம்பியதில் நியாயம் இருக் கவே செய்தது. ஆனால் குபேரனுக்குத் தெரிந்த அந்தக் கொக்குவில் நண்பர், குபே ரன் சங்கதி ரகசியமாக இருக்கட்டும் என்று அடித்துச் சொல்லி வைத்தும் கேளாமல், கம லத்தின் மாமா காதில் சங்கதியைப் போட்டு வைத்து இரகசியம் ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதீங்க என்றும் அவர் சொல்லத் தவறவில்லை. இதனால் தான் கோழி வாங்க வந்த தம்பியை "கமலத்தைத் திருட்டுத்தனமாகப் பார்க்க வந்த பொடியன். நல்ல பொடியனாம். ஆளும் வாட்டசாட்டமா இருக்கிறார். இலண்டன் மாப்பிள்ளை. விட்டிராதை பார்வதி " என்ற சங்கதியை பார்வதியின் காதில் போட்டு அவளை அடுக்களையில் உஷார்படுத்தியிருந்தார் சிவகடாட்சம் மாமா...... இதைத் தொடர்ந்தது தான் கூல்ரிங்கும், பலகாரமும்! மனிதன் சுயநலவாதி. தன் இலாபத்திற்காக நேரத் திற்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள் ளும் சந்தர்ப்பவாதி அவன்..

திலகனுக்கு மகா குழப்பம்.. ஒருநாளும் இல்லாத திருநாளாய் அவனது அக்காள் அவன் கையில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களைத் திணித்து,

"தம்பி இந்தா நீ கேட்ட காசு..அது சரி கோழி வாங்க வந்த மாமாவை உனக்கு யாரெண்டு தெரியுமா?" என்று கமலம் கேட்ட போது, அவன் குழப்பம் எல்லை மீறியது. இதென்ன கதையாக இருக்கிறது? அம்மா வும் மாமாவும் வீட்டுக்கு வந்தவரை கதிரை யில இருத்தி வைத்து பலகாரமும் கூல்ரிங் கும் கொடுக்கினம். எப்பவோ கேட்ட நூறு ரூபாய்க்காக, இருநூறு ரூபாயைக் கையில திணிச்சு, கோழி வாங்க வந்த மாமாவைத் தெரியுமா எண்டு கேக்கிறாள் அக்காள். அவன் நன்றாகவே குழம்பிப் போனான்.

சேவல் கோழிகளை வெறுக்கும் அவன் வீட்டுக் கோழியொன்று வெளியிலிருந்து வந்த சேவல் ஒன்றின் மீது மோகம் கொண்டு விட்டதையும்,வீட்டில் ஒரு பெட் டைக் கோழி இனி வந்த சேவலோடு வெளி யேறப் போகிறது என்பதும் அவனுக்குப் புரிந்திருந்தால் ஒருவேளை இந்தக் குழப்பம் தீர்ந்திருக்கலாம்... வீட்டில் ஒரு பெட்டைக் கோழி குறைகிறது என்ற அற்ப சந்தோஷ த்தையும் கொடுத்திருக்கலாம்.....

நேரகாலம் தெரியாமல் தனிக்காட்டு ராஜாவாகத் தெரியும் திலகன் வீட்டுச் சேவல் கூவியது......

# காணி உரிமையை வழங்க கோரி
# ஹற்றனில் மக்கள் ஆர்ப்பாட்டம்

"பெருந்தோட்ட சமூக காணி உரிமைக்கான மக்கள் இயக்கம்" ஏற்பாடு செய்த பொது நிகழ்வும் மக்கள் ஆர்ப்பாட்டமும் கடந்த 2016 ஜுலை 3 ஆம் திகதி ஹற்றன் நகரில் நடைபெற்றது. இதில் சுமார் 450 பேர் வரை கலந்து கொண்டனர். ஹற்றன் நகரசபை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் காணி உரிமையை எவ்வாறு பெற்றுக்கொள்வது. எதிர்பார்ப்புகள் எவ்வாறு அமைகின்றது என்ற விடயங்களோடு காணி உரிமை பற்றிய கலை நிகழ்வுகள், நாடகங்கள், வில்லுப்பாட்டுக்கள் என்பன மேடையேற்றப்பட்டதுடன் இளைஞர்களால் உருவாக்கப்பட்ட செய்திதாள் ஒன்றினையும் வெளியிட்டு வைத்தனர். இதில் ஊவா மற்றும் மத்திய மாகாணத்தில் உள்ள இளைஞர்களின் பதிவுகள் இடம்பெற்றிருந்ததோடு மக்கள் அன்றாடம் இந்நடவடிக்கைகளை பதிவு செய்யவும் பார்வையிடுவதற்காகவும் Face Book முகவரி ஒன்றையும் அறிமுகம் செய்துள்ளனர். People Movement for Plantation Community Land Right தொடர்ந்து பொதுமக்களின் கையொப்பங்களை திரட்டும் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்ததுடன் இதில் ஒரு லட்சம் கையொப்பங்களை திரட்டி



எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் பொது மக்கள் பேரணியுடன் கொழும்பில் ஜனாதிபதி யிடம் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவித்தனர். தொழிற்சங்கவாதி வீனஸ் ஜயதிலக்க மற்றும் இவ்வமைப்பின் இணைப்பாளர் எஸ்.டி. கணேசலிங்கம் ஆகியோர் பிரதான உரையாற்றினர்.

வீனஸ் ஜயதிலக்க தனது உரையில்,

இந்த நாட்டில் நீண்ட வரலாற்றை கொண்ட பெருந்தோட்ட சமூகத்திற்கு காணி உரிமை வழங்காதிருப்பதும் அவர்களின் உரிமைகள் பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தாதிருப்பதும் பாரதூரமானது. இதற்காக மக்கள் தொடர்ந்து குரல் எழுப்ப வேண்டும். அத்தோடு ஏனைய மக்களும் இச்சமூகத்திற்காக குரல் கொடுப்பது முக்கியமானதொன்றாகும். அதற்கான செயற்பாடுகளை நாமும் முன்னெடுக்க தயாராக இருக்கிறோம் என்றார்.

இணைப்பாளர் எஸ்.டி. கணேசலிங்கம் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த பல தசாப்தங்களாக பெருந்தோட்ட மக்களின் இருண்ட யுகமாகும். இவர்கள் இந்நாட்டின் தேசிய வருமானத்திற்கு முதுகெலும்பாக செயற்பட்டார்கள். ஆனால் இன்னும் இவர்கள் இந்நாட்டு பிரஜைகள் என்பதை நிரூபிக்க முடியவில்லை. நாடு சுதந்திரம் அடைந்தவுடன் இவர்களது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. தேசிய நீரோட்டத்தில் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டார்கள். 2003 ஆம் ஆண்டில் பிரஜாவுரிமை சட்டத்தின் மூலம் இவர்களுக்கு பிரஜாவுரிமை கிடைத்ததாக சொல்லப்பட்டாலும் இந்நாட்டில் மலையக மக்களுக்கென்று சொந்தமாக நிலவுரிமை கிடைக்கவில்லை.

1942 இல் கேகாலை. புலத்பிட்டியவில் தொழிலாளர்களுடைய காணியை வெளியாருக்கு அரசாங்கம் கொடுத்த போது தமக்கும் காணி வழங்கப்பட வேண்டும் என்று போராட்டம் செய் தார்கள். 1977 இல் டெவன் பகுதியில் உள்ள 7000 ஏக்கர் காணிகளை அரசு சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொண்ட போது அதை தடுத்து நிறுத்த மக்கள் போராட்டத்தில் இறங்கினார்கள். அதனால் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி சிவனு லட்சுமணன் உயிரிழந்தார். ஆனால் காணி உரிமை கிடைக்கவில்லை.








அரசாங்கம் பல்வேறு திட்டங்களில் காணி உரிமை சம்பந்தமாக வாக்குறுதியளித்தாலும் அது பெருந்தோட்ட மக்களுக்கு எட்டாக்கனியாக இருந்துள்ளது. உதாரணமாக1978ஆம்ஆண்டுஉருவாக்கப்பட்ட நட்சா திட்டத்தின் மூலம் 26000 ஏக்கர் காணிகள் 1400 சிங்கள குடும்பங்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இவை தோட்டக்காணிகள். 1989 ஆம் ஆண்டு காணி சம்பந்தமான ஜனாதிபதி பணியகம் ஆரம்பித்து 10 லட்சம் ஏக்கர் காணிகளை இத்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக 550 நில அளவையாளர்கள் பணிக்காக




அமர்த்தப்பட்டனர். ஒவ்வொரு நில அளவையாளரும் மாதாந்தம் பகிர்ந்தளிக்கக் கூடிய 200 காணி அலகுகளை அடையாளம் காண வேண்டும். இவ்வாறு அடையாளம் காணப்பட்டதன் பின்னர் காணி கச்சேரி அமைக்கப்படும். இக்கச்சேரி நிலமற்றவர்களிடமிருந்து விண்ணப் பங்களை பெற்றுக் கொள்ளும். இவ்வாறு விண்ணப்பித்து அங்கீகரிக்கப்பட்ட விண் ணப்பதாரிகளுக்கு சுவர்ண பூமி திட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்படும். தற்போதுள்ள மாகாண சபைகள் இத்திட்டத்தின் கீழ் காணி பங்கீட்டில் முக்கிய இடம் வகிக்கின்றன. இப்பணியகம் இதுவரை 700,000 ஏக்கர் பகிர்வதற்கு தகுதியானவர்களை அடையாளம் கண்டுள்ளது. இதில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிவரை 337, 500 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. 1994 ஆம் ஆண்டு இறுதிக்குள் 50 000 ஏக்கர் காணிகளை பகிர்ந்தளிப்பதே இப்பணியகத்தின் குறிக்கோளாகும். இதில் 5 000 ஏக்கர் குடியிருப்புத் தேவைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் 1994 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் நுவரெலியா மாவட்டத்தில் 784 ஹெக்டெயர் காணிகள் வெளியாருக்கு பிரித்து கொடுக்கப்பட்டுள்ளதுடன் தொழிலாளர்களுக்கு இக்காணிகள் வழங்கப்படவில்லை. 1993 ஆம் ஆண்டு நுவரெலியாவில் வைத்து தொழிலாளர் குடியிருக்கும் வீடும் வீட்டுத்தோட்டமும் அவர்களுக்கு சொந்தமாக்கப்படும் என பொய் காணி உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டது. தற்போது நல்லாட்சி அரசில் "பசுமை பூமி" திட்டத்தில் காணி உறுதிப்பத்திரம் வழங்குவதாக எடுக்கப்பட்ட நடவடிக்கையும் பொய்யானதாகவே காணப்பட்டது.

தற்போதுபல்வேறு வீடமைப்புதிட்டங்கள் மலையகத்தில் முன்னெடுக்கப்பட்டது. அதில் சில இடங்களில் 7 பேர்ச் காணியில் இல்லாது 5 பேர்ச் காணியில் குறிப்பிட்ட வீடுகள் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்தும் மலையக சமூகத்திற்கு பாதகமான செயற்பாடுகளாகவே கருதப்படுகின்றது. மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் இம்மக்களின் காணி உரிமை விடயத்தில் தொடர்ந்தும் தவறான சிந்தனைகளுடனேயே செயற்பட்டு வந்ததால்... இன்று மக்கள் வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. MONLAR நிறுவனம் பெருந்தோட்ட துறையில் காணிகள் சம்பந்தமாக செய்யப்பட்ட 2006 ஆம் ஆண்டு ஆய் வில் 24.4 வீதம் பராமரிக்காத காணி கள் மலையகத்தில் காணப்படுவதாக இனங்காணப்பட்டது. இது 68 ஆயிரங்களுககும் அதிகமானதாகும். இவ் ஆய்வை பேராதெனிய பல்கலைக்கழக சிரேஸ்ட

**மஸ்கெலியா நிருபர் (செ.தி.பெருமாள்)**

விரிவுரையாளர ஹெக்டெயர் திரு. எஸ். விஜயசந்திரன் தலைமையில் செய்யப்பட்டது. இதுவே மலையகத்தில் செய்யப்பட்ட முதலாவது காணிசம்பந்தமான ஆய்வாகும். இதனை தொடர்ந்து மலையக மக்களின் காணி உரிமை சம்பந்தமாக குரலெழுப்பி வந்ததுடன் 2012-2013 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் அரசாங்கம் 37 ஆயிரம் ஹெக்டெயர் காணிகள் மலையகத்தில் பராமரிக்கப்படா திருப்பதாகவும் அதை தொழிலாளர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதாக கூறியது. பினனர் இக்காணிகள் இளைஞர்களின் பயிர்செய்கை நடவடிக்கைக்காக பிரித்து கொடுக்கப்படும் என கூறினாலும் அது நடைபெறவில்லை. ஆனால் "பெருந்தோட்ட சமூக காணி உரிமைக்கான மக்கள் இயக்கம்" இது பற்றி குரல் கொடுத்துள்ளதுடன் கடந்த வருடமும் ஜுன் 30 ஆம் திகதி ஹட்டனில் பாரிய ஆர்பாட்டம் செய்தது. மலையக நகரங்களிலும் தலை நகரங்களிலும் பல்வேறு போராட்டங்களை செய்துள்ளோம்.

(தொடர்ச்சி 18 இல்)

# ஆன்மீகம்



## கிழமை விரதமும், அதன் பலன்களும்

எந்த கிழமைகளில் விரதம் இருந்தால் என்ன பலன் கிடைக்கும்?

விரதம் என்றாலே சாப்பிடாமல் இருந்து கடவுளை வணங்குவது என்று நிறைய பேர் நினைப்பது உண்டு. நம் எண்ணங்களை ஒரு கட்டுப்பாடுடன் வைத்து, மனதை சந்தோஷமாக வைப்பதே விரதம் ஆகும். ஜீரண உறுப்புகளுக்கு ஓய்வு கொடுத்து, உடலை புதுப்பிப்பதே விரதத்தின் நோக்கமாகும்.



அசைவ உணவை தவிர்த்து, சைவ உணவு உண்பது, நீர், பால், பழம், ஜூஸ் இவற்றில் ஏதாவது ஒன்றை அருந்தி விரதம் இருக்கலாம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக விரதத்தை கடைப்பிடிக்கிறார்கள். எந்த முறையை பின்பற்றினாலும், பலன் கிடைப்பது நிச்சயம்.

ஞாயிற்றுக் கிழமை விரதம் இருந்தால் தீராத நோய் அகலும்.

திங்கள் கிழமை விரதம் இருந்தால் கணவனின் பரிபூரண அன்பை பெறலாம்.

செவ்வாய்க் கிழமை விரதம் இருந்தால் கணவன் மனைவி தகராறு நீங்கி ஒற்றுமையுடன் வாழலாம்.

புதன் கிழமை விரதம் இருந்தால் நோய்கள் தீரும்.

வியாழக் கிழமை விரதம் இருந்தால் புத்திர பாக்கியம் கிட்டும்.

வெள்ளிக் கிழமை விரதம் இருந்தால் கணவன் நீண்ட ஆயுளுடன் வாழ்வர்.

சனி கிழமை விரதம் இருந்தால் செல்வம் பெருகும்.

## கோயில் சிலைகளை தொட்டு வணங்கலாமா?



கோயில் என்பதை மரியாதைக்குரிய இடமாக கருதுகிறோம். பொதுவாக மரியாதைக்கு உரிய மனிதர்களையே நாம் தொட்டுப் பேசுவது கிடையாது.

ஒரு சில அடி தூரம் தள்ளி நின்று பவ்யமாகவே பேசுவோம்.

மரியாதைக்குரிய மனிதர்களுக்கு இவ்வளவு மதிப்பளிக்கும் நாம், இறைவனைத் தொட்டு வணங்குவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? எனவே, தெய்வச் சிலைகளை தொடாமல் வணங்குவதே சிறந்தது.

இதற்காக சிலைகளைத் தொட்டால் பாவம், தீட்டு என்பது போல் காரணம் கற்பித்துக் கொள்ளக் கூடாது.

மரியாதை நிமித்தமாகவே சிலைகளை தொடாமல் வணங்க வேண்டும் என்கிறோம் இறைவன் மேன்மை பொருந்தியவர் என்பதையும், அவரைத் தொடும் தகுதி நமக்கு இல்லை என்பதாலும், தொடாமல் தள்ளி நின்று வணங்குவது நல்லது.

## ஆன்மீக கேள்வி - பதில்!!!

1) கிரகப்பிரவேசத்தின் போது முதலில் பசுமாட்டை வீட்டிற்கு அழைத்து வருவது ஏன்?

பசு லட்சுமியின் அம்சம். தர்ம தேவதையின் அடையாளம். பால் தருவதால் "கோமாதா' என்று தாயாகப் போற்றுவர். வீட்டில் லட்சுமி கடாட்சம் நிலைக்கவும், தர்மம் தழைக்கவும் பசுவை வீட்டுக்குள் அழைத்துச் செல்கிறார்கள்.

2) மற்றவர் ஏற்றிய அகல் விளக்குகளில் நாம் தீபம் ஏற்றலாமா?

யார் ஏற்றினாலும் தீபம் ஒன்று தான். சுவாமிசந்நிதியில்தீபம்ஏற்றினால்நாம் செய்த பாவங்கள் நீங்கி புண்ணியம் கிடைக்கிறது. இது விளக்கேற்றினால் கிடைக்கும் பலன் தானே தவிர எரிகிற விளக்கில் ஒன்றுமில்லை. ஒருவர் ஏற்றிய விளக்கில் நாம் மீண்டும் விளக்கேற்றினால் அவரது பாவம் நமக்கு வந்துவிடாது. நமது புண்ணியமும் அவருக்குப் போய் விடாது. சந்நிதியில் விளக்கேற்றுகிறோம் என்ற தூய சிந்தனையுடன் மட்டும் தீபம் ஏற்றுங்கள். அதிகமாக தீக்குச்சிகளை உபயோகிப்பதால் குச்சிகள் குவியும் தொந்தரவும் இருக்காது.




## அத்தியாயம் 10

# சந்தர்ப்பவாதிகள்

எதிர்பார்ப்புகள் இருப்பதால் தான் ஏமாற்றங்களை மனிதனால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. ஆனால் எதிர்பார்ப்பு இல்லா மலும் மனிதனால் வாழ முடிய வில்லை. ஒன்றைச் செய்து விட்டு அதன் பலனை, விளைவை எதிர்பார்ப்பதில் என்ன தவறு இருக்கின்றது? ஆனால் அப்படி எதிர்பார்த்து, நமக்குச் சாதகமான விளைவுகள் கிடைக்காவிட்டால், ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது என்பது உண்மைதான்.

உமா வீட்டுக்குப் பெண் பார்க்க வந்தவர்கள் பலர். மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து சாதகமான பதில் உடனே வந்துவிடும் என்று உமா ஒருபோதும் எதிர்பார்த்தது இல்லை. என்றாலும் கடைசித் தடவை சித்திரவேல் தன் மனைவியுடன் வந்து போன நாள் தொடக்கம், அவளுடன் எதிர்பார்ப்பு என்பது ஒட்டத் தொடங்கியது. தன்னைப் பெண் பார்க்க வந்த சித்திரவேலையும் அவர் மனைவி சுசீலாவையும் அவளுக்குப் பிடித்திருந்தது பிரதான காரணமாக இருக்கலாம். மாமாவும் மாமியும் சினேகமானவர்களாக இருந்தால், மாப்பிள்ளையை எப்படியும் சமாளித்துக் கொள்ளலாம் என்று அவள் திடமாக நம்பினாள். அதன் விளைவாக, இவர்கள் பிள்ளை எனக்குக் கணவனாகக் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று ஒரு எதிர்பார்ப்பு அவளிடம் குடிகொள்ளத் தொடங்கி இருந்தது...



ஏதாவது கடிதம் அல்லது தொலைபேசி அழைப்பு வரலாம் என்று அவள் எதிர்பார்த்தாள். நாட்கள் அதிகரிக்க அதிகரிக்க பிடிக்காவிட்டால் இல்லை என்று தகவல் தந்தால் மனம் எதிர்பார்ப்புகளை விட்டு ஓரளவு ஆறுதல் அடையுமே என்று அவள் மனதுக்குள் கோபப்பட்டாள்..

அன்று ஒரு சனி தினம்... பத்திரிகையை அவள் கண்கள் மேய ஆரம்பித்த போது, வானம் இருண்டு, மழை பெய்யத் தொடங்கியது.

“வெளியில காயப்போட்ட உடுப்புக்களை எடுத்துப் போட்டியா?” இருந்தா மழை வலுக்கிறதுக்கிள எல்லாத்தையும் எடுத்திடு” என்றாள் அங்கே வந்த அவள் தாய்.

“ஒன்றும் இல்லை அம்மா” என்றவள் தொடர்ந்து பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டினாள்.

“அட இதென்ன புது மாதிரி மழையாக் கிடக்கு... இண்டைக்கு மழை பெய்யத் தொடங்கி நாலாம் நாள். காண்டாவனம் எட்டில துவங்கி இருபத்தி ஒன்பதில முடியுதாம். இண்டைக்கு பதினாலாந் திகதி. எல்லாத்தையும் பொசுக்கிற மாதிரி வெயிலடிக்கிற கிழமை இது. இப்பிடி மழை பெய்ஞ்சு கொட்டுதே.. ” அம்மா வெளியில் இடிமுழக்கத்தோடு கொட்டும் மழையைப் பார்த்து அதிசயித்தாள்.

“அம்மா அண்டைக்கு இதைப் பற்றி நானும் பேப்பரில வாசிச்சனான். இந்தக் காண்டாவனத்திற்கு கத்திரி வெயில், அக்னி நட்சத்திரம் எண்டும் பெயர்கள் இருக்காம்.”

“அதென்னடி கத்திரி வெயில்.. நான் கேள்விப்படாத பேராக் கிடக்கு.. ” மகளைக் கேள்விக்குறியோடு பார்த்தாள் தாய்.

“இப்பிடியும் பெயர்கள் இருக்கும் போல கிடக்கு. ஆனால்எரிக்கிறவெய்யில்காலத்தில ஊரில மழை வெள்ளம் போடுறதுதான். காலங் கெட்டுப்போய் கிடக்கு உமா...”

“அதெண்டா உண்மைதான் அம்மா. எல்லாமே இப்ப தலைகீழாத்தான் நடக்குது”.

வெளியே இடி முழங்கியது. அம்மா கத்தினாள்.

“உள்ள வாடி. அறைக்கிள இருந்து பேப்பரை வாசி...”

உமா சிரித்தாள்.

“தலையில கிலையில விழுந்திடும் எண்டு பயப்பிடுறியோ அம்மா.. நீ எதுக்கும் யோசிக்காத அம்மா. உனக்கு ஐஞ்சாறு பேரப்பிள்ளைகளை பெத்துக் கொடுக்காம, இந்த உமா மண்டையைப் போடமாட்டா..”.

“விசர்க் கதை கதைக்காதடி... உனக்கென்னடி மண்டையைப் போடுற கதை இப்ப ...” அம்மா இந்தத் தடவை கடுங் கோபத்தோடு சீறினாள்.

“அம்மா இதுக்குப் போய் கோபிக்கிறியளே.”.

பேப்பரைப் போட்டுவிட்டு தாயை வந்து செல்லமாக அணைத்துக் கொண்டாள் உமா..

தாயோ அழத் தொடங்கினாள்.

“உன்ர தங்கமான குணத்திற்கு இன்னும் ஒரு பொடியன் கிடைக்கிறான் இல்லையே.. ”

ஒரு தாயின் ஏக்கம் மகளுக்குப் புரியாமலா இருக்கப்போகின்றது? “அம்மா எதுக்கு இப்ப புலம்பிறா? எனக்கெண்டு எங்கேயோ ஒருத்தன் இருக்கிறான். வரக் கொஞ்சம் பிந்தும் முந்தும் அவ்வளவுதான் அம்மா. ”

மீண்டும் கதிரையில் உட்கார்ந்து பாதியில் விட்ட ஓர் ஆய்வுக் கட்டுரையை தொடர்ந்து வாசிக்க ஆரம்பித்தாள்.

அப்பொழுது கேட் அருகே தபாற்காரன் பெல்.... பேப்பரை அப்படியே போட்டுவிட்டு, வாசலில் காத்திருக்கும் தபாற்காரனை நோக்கி விரைந்தாள்.

எந்தப் பருவத்திலும் தபாற்காரன் எனப்படுபவன் ஒரு முக்கியமானவன்தான். நல்ல செய்தியோ கெட்ட செய்தியோ அவன் மூலந்தானே வருகின்றது. இப்பொழுது இணையக் கடிதங்கள் தபாற் கடிதங்களை ஓரங்கட்ட முனைந்து விட்டாலும், தபாற்காரனின் கடிதத்தையோ அல்லது பார்சலையோ எதிர்பார்ப்பது இன்றும் சுவைத்துக் கொண்டுதானே இருக்கின்றது. வாழ்வில் பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தும் நியமனக் கடிதங்கள் தபாலில்தானே வந்து போகின்றன?

வெளிநாட்டுக் கடிதமில்லை. முகவரி எழுத்தும் தெரிந்ததாக இல்லை.

யாராக இருக்கும்.

உறையைப் பிரித்து கடிதத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள்.

பிரியமுள்ள உமா,

“நான்தான் சித்திரவேல் எழுதுறன். உன்னைப் பெண் பார்க்க வந்த சித்திரவேல்தான் நான். மறந்திட்டியோ தெரியல்ல. நாங்க வந்து போனதிற்கு இண்டு வரைக்கும் ஒரு கடுதாசியும் போடேல்ல எண்டு கோபிச்சுப்போடாதேயும்பிள்ளை. கிட்டடியில வந்த கடுதாசி ஒண்டாலதான் இப்ப நான் உனக்கு கடுதாசி எழுத வேண்டிக் கிடக்கு. கனடாவில இருந்து ஒரு பொடிச்சி கடுதாசி போட்டிருக்கு..........”

கடிதத்தை மளமளவென்று வாசித்து முடித்தபோது, தன் எதிர்பார்ப்புகள், புஸ்வாணமாகி விட்டதை அவள் உணர்ந்தாள். தான் கவலைப்பட்டதை விட, இதை அம்மாவிடம் எப்படிச் சொல்வது என்று நினைத்து பெரிதும் கவலைப்பட்டாள் உமா.

என்ன உமா கடிதம்......... அம்மாதான் அக்கறையோடு கேட்டாள். பாவம் அம்மா. ஏமாற்றங்களை சுலபமாகத் தாங்கிக் கொள்ளும் வயசில்லை அவளுக்கு.

சட்டென அவள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

“என்னோட படிச்ச சங்கீதா கடிதம் போட்டிருக்கிறாள் அம்மா...”

“என்னவாம்..? ”

“அவளை மட்டக்களிப்பில இருந்து திருகோணமலைக்கு டிரான்ஸ்பர் பண்ணி இருக்கினமாம்.. அதுக்கிள ஒரு கிழமை லீவில யாழ்ப்பாணம் வாறாளாம். என்னையும் லீவில நிக்கட்டாம் ”

“பாவம் பொடிச்சி.. திரிகோணமலையில இவளுக்கு யாரைத் தெரியும்..? இவள் கஸ்டப்படப் போகிறாளே...”

தன் கட்டுக்கதை அம்மாவை அனுதாபப்பட வைத்திருப்பதை நினைத்து அவளுக்குச் சங்கடமாக இருந்தது. ஒரு பொய்யை மெய்யாக்க நூறு பொய்கள் சொல்ல வேண்டிவரும்.

“அவள் அப்பீல் பண்ணப் போறாளாம். பத்து வருஷ சேவிஸ் முடிச்சிட்டதால, யாழ்ப்பாணத்து பள்ளிக்கூடமொண்டுக்கு டிரான்ஸ்பர் கேட்கப் போறாளாம். ”

கதையை அவள்மேலேவளர்க்கவிரும்பவில்லை. பெண் பார்க்கும் படலம் இனியும் தொடரக்கூடாது என்று அப்பொழுதே அவள் நினைத்துக் கொண்டாள். இது இலகுவில் முடிகின்ற ஒன்றா? ஏன் முடியாது? தன் பள்ளிக்கூடத்தில், தன்னைச் சுற்றி வளைய வரும் விதுரனின் ஞாபகம் வந்தது. தன்னை அவன் விரும்புகிறான் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் ஏனோ தெரியவில்லை. அவளுக்கு அவனைக் கட்டிக்கொள்ள இது வரை விருப்பம் வந்ததில்லை.

அவனைக் கட்டச் சம்மதித்தால் இந்தப் பெண் பார்க்கும் படலம் நிற்கலாம் அல்லவா? ஒன்றில் தப்ப நினைத்து இன்னொன்றில் மாட்டுவதும் அபத்தம் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

எந்தப் பிரச்சினைக்கும் எங்கோ ஒரு தீர்வு இருக்கத்தானே வேண்டும்? விட்ட இடத்திலிருந்து பத்திரிகையை வாசிக்க ஆரம்பித்தாள். சற்று ஓய்ந்திருந்த மழை மீண்டும் சோவென்று பெய்ய ஆரம்பித்தது..

(தொடரும் ...)

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## காணி உரிமை ...

தற்போது மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறிப்பிட்ட இளைஞர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்கள் தலைமையில் மக்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தப் படுகின்றது.

இவ்வமைப்பின்மூலம் இதுவரை பல்வேறு வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வமைப்பின் பல்வேறு தொழிற் சங்கங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் அங்கத்துவம் வகிப்பதுடன், இவை நீண்டகாலமாக கலந்துரையாடி ஒரு கொள்கை பத்திரம் ஒன்றையும் தயாரித்துக்கொண்டுள்ளதுடன் அதில் பிரதான நான்கு கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றது. அவையாவன:

01. ஒரு குடும்பத்திற்கு 20 பேர்சஸ் நிலம் கணவன் மற்றும் மனைவியின் பெயர்களில் காணி உறுதிப்பத்திரத்துடன் வழங்கவேண்டும்.

02.பயிர்செய்கைக்காக (வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்துவதற்காக) குடும்பத்திற்கு ஒரு ஹெக்டேயருக்கு குறையாத நிலம் வழங்கவேண்டும்.

03.பெருந்தோட்ட சமூக கிராமங்களை ஸ்தாபித்தல் மற்றும் இதை அரச நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருதல்.

04.பெருந்தோட்ட காணி பிரச்சினையை தீர்ப்பதற்காக விசேட காணி ஆணையாளர் ஒருவரை நியமித்தல்.

அத்தோடு இவ்வருட இறுதிக்குள் ஒரு லட்சம் பொதுமக்கள் கையொப்பங்களை பெற்று பாரிய மக்கள் ஒன்றுகூடலுடன் ஜனாதிபதியிடம் கையளித்தல், தொடர்ச்சியாக இளைஞர் பயிற்சிகளை முன்னெடுத்தல், செப்டெம்பர் மாதத்தில் ஊவா மாகாணத்தில் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தல், ஒக்டோபர் மாதத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஏனைய அமைப்புக்களை சந்தித்து கொள்கை பத்திரத்தினை கையளித்து கலந்துரையாடுதல், நவம்பர் மாதத்தில் தலைநகரில் பொது ஊடகவியலாளர் சந்திப்பை நடாத்துதல் போன்றவற்றுடன், தொடர்ந்தும் மக்களுடனான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் என்பன திட்டமிடப்பட்டுள்ளது என்று தனது உரையில் இவ்வமைப்பின் நடவடிக்கைகள் பற்றி தெளிவாக கூறினார்.

இந்நிகழ்வு எவரும் எதிர்பாரக்க முடியாத ஒரு சிறப்பம்சமாக காணப்பட்டதுடன் மலையக தமிழ் மற்றும் சிங்கள ஊடகவியலாளர்கள்கூட அதிகமாக இந்நிகழ்ச்சியை பதிவுசெய்வதற்காக வருகை தந்திருந்தனர். இதில் பல்வேறு மக்களும் தமது கருத்துக்களை ஊடகங்களுக்கு வழங்கினர்.

# விளையாட்டு



## விம்பிள்டன் இறுதிச்சுற்றில்
## செரீனா-கெர்பர்



விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் இறுதிச் சுற்றில் நடப்பு சாம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸூம், ஜெர்மனியின் ஏஞ்ஜெலிக் கெர்பரும் மோதவுள்ளனர். இந்த ஆட்டம் சனிக்கிழமை நடைபெறுகிறது.

லண்டனில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் வியாழக்கிழமை நடைபெற்ற அரையிறுதியில் உலகின் முதல் நிலை வீராங்கனையான செரீனா 6-2, 6-0 என்ற நேர் செட்களில் ரஷியாவின் எலினா வெஸ்னினாவை தோற்கடித்தார். இதன்மூலம் விம்பிள்டன் போட்டியில் 9 ஆவது முறையாக இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார் செரீனா. இறுதிச்சுற்றில் கெர்பரை வீழ்த்தும் பட்சத்தில் "ஓபன் எரா" வில் அதிக கிராண்ட்ஸ்லாம் (22) வென்றவரான ஸ்டெஃபி கிராஃபின் சாதனையை சமன் செய்வார் செரீனா.

கெர்பர் வெற்றி: மற்றொரு அரையிறுதியில் ஜெர்மனியின் ஏஞ்ஜெலிக் கெர்பர் 6-4, 6-4 என்ற நேர் செட்களில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் தோற் கடித்தார். இந்த ஆட்டத்தை 71 நிமிடங்களில் முடித்தார் கெர்பர்.


ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் இறுதிச் சுற்றில் செரீனாவை வீழ்த்தி முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற கெர்பர், இந்த முறையும் செரீ னாவை மிகுந்த நம்பிக்கையோடு எதிர்கொள்வார் என எதிர்பார்க்கப் படுகிறது.

## யூரோ கப் 2016 - இறுதிச் சுற்று

யூரோ கிண்ண சாம்பியன்ஷிப் தொடரில், ஜெர்மனி அணிக்கு எதிரான அரை இறுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணி வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது. இதன் மூலம் வரும் 11 ஆம் தேதி நடைபெற உள்ள இறுதி போட்டியில் பிரான்ஸ் - போர்த்துக்கல் அணி பலப்பரீட்சை நடத்த உள்ளது.

யூரோ கிண்ண போட்டியில் போர்த்துக்கல் அணி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது. அந்த அணி தனது அரையிறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வேல்ஸ் அணியைத் தோற்கடித்தது.

போர்த்துக்கல் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ முதல்கோலை



## பலப்பரீட்சையில்
## பிரான்ஸ் - போர்த்துக்கல்

அடித்ததோடு, சகவீரரான நானிக்கும் கோலடிக்கும் அற்புதமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து அசத்தினார்.

பிரான்ஸின் லயன் நகரில் புதன்கிழமை நள்ளிரவு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் அபாரமாக ஆட, முதல் பாதி ஆட்டம் கோலின்றி முடிந்தது.

பின்னர் நடைபெற்ற 2 ஆவது பாதி ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே வேல்ஸ் அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. 5 ஆவது நிமிடத்தில் (ஒட்டு மொத்தத்தில் 50 ஆவது நிமிடம்) இடது "கார்னர்" பகுதியில் நின்றிருந்த போர்த்துக்கல் வீரர் ரபேல் கெரைரோவிடம் பந்து செல்ல, அவர் மிக நேர்த்தியாக கோல் கம்பத்தை நோக்கி கிராஸ் செய்தார். அப்போது வேல்ஸ் பின் கள வீரர்களுக்கு மத்தியில் நின்ற ரொனால்டோ, மிக வேகமாக மேல் நோக்கி பாய்ந்து பந்தை தலையால் முட்டி கோலடித்தார்.

வேல்ஸ் அணி முதல் கோலை வாங்கிய அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள்ளாகவே அடுத்த கோலை அடித்தது போர்த்துக்கல். 53 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ கொடுத்த கிராஸ் மிக லாவகமாக திருப்பி கோலாக்கினார் நானி. இதன்பிறகு சரிவிலிருந்து மீள்வதற்கு வேல்ஸ் அணி கடுமையாகப் போராடியபோதிலும், கடைசி வரை கோலடிக்க முடியவில்லை. இதனால் போர்த்துக்கல் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கண்டது.

அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னதாக வேல்ஸ் கப்டனும், ரியல் மாட்ரிட் கிளப்பில் தன்னுடன் இணைந்து விளையாடி வருபவருமான கேரத் பேலிடம் ரொனால்டோ பேசவில்லை. ஆனால் போட்டி முடிந்த பிறகு கேரத் பேலை கட்டித் தழுவி ஆறுதல் கூறினார்.

வேல்ஸ் அணிக்கு எதிராக கோலடித்த தன் மூலம் யூரோ கிண்ணப் போட்டியில் 9 ஆவது கோலைப் பதிவு செய்தார் ரொனால்டோ. இதன்மூலம் யூரோ வரலாற்றில் அதிக கோலடித்தவரான பிரான்ஸின் மைக்கேல் பிளாட்டினி சாதனையை சமன் செய்தார்.

லயன் நகரில் நடைபெற்ற இரண்டாவது அரை இறுதி போட்டியில் பிரான்ஸ்-ஜெர்மனி அணிகள் மோதின.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில், முதல் பாதியில் பிரான்ஸ் அணி ஒரு கோல் அடித்து 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. ஆட்டத்தின் 45-வது நிமிடத்தில் தனக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை பிரான்ஸ் அணி வீரர் கிரீஸ்மேன் கோலாக மாற்றினார்.

இதனால் ஆட்டத்தின் இரண்டாவது பாதி தொடங்கியது முதலே ஜெர்மனி வீரர்கள் கோல் அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இருப்பினும் ஆட்டத்தில் 72 நிமிடத்தில் பிரான்ஸ் அணி இரண்டாவது கோலை அடித்தது. பிரான்ஸ் அணியின் கிரீஸ் மேனே இரண்டாது கோலை அடித்து அசத்தினார். இதனால் அந்த அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை அயடைந்தது.



தினச்செய்தி
என்றும் உங்களுடன்






# சிங்கள மயமாகும் கன்னியா வெந்நீருற்று



கன்னியாவில் தான் இலங்கையில் மிகப் புகழ் பெற்ற வெந்நீர் ஊற்று அமைந்துள்ளது. கிழக்கு மாகாணத்தின் துறைமுக நகரமான திருகோண மலையில் இருந்து, அனுராதபுரம் - திருகோண மலை வீதியில் 8 ஆவது கிலோமீற்றரில் கன்னியா அமைந்துள்ளது.

கன்னியாவில் மொத்தமாக 7 வெந்நீர் ஊற்றுக் கிணறுகள் உள்ளன. அந்தக் கிணறுகள் ஒவ் வொன்றும் ஒவ்வொரு விதமான வெப்ப தன்மை கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு கிணறும் சதுரமான 3-4 அடி ஆழம் உள்ளதாக அமைந் துள்ளது. இந்த 7 கிணறுகளும் ஒரே சதுரத்தில் அமைந்துள்ளன.

கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு அண்மையில் விஜயம் செய்த போது அது சிங்கள மயமாக்கப் பட்டதைக் கண்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தோம். இந்த வெந்நீர் ஊற்றுக்கள் இரா வணன், இராமாயணத்துடன் தொடர்புடையவை. ஆனால் இன்று அந்த கிணறுகள் அமைந்த பகுதியில் சில புத்தமத சின்னங்கள் இருந்ததாகக் கூறுகிறார்கள்.

இந்த வெந்நீர் ஊற்று எல்லாம் பௌத்த மதத் துடன் சம்பந்தப்பட்டவை என இலங்கை அரசாங்க மும், சிங்கள தொல்பொருள் ஆய்வாளர்களும் கூற முன்வருகிறார்கள்.

கன்னியா வெந்நீர் ஊற்றை சிங்கள மயமாக்க முயற்சிப்பதை கண்டித்து தமிழர் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை தேர்தல் தொகுதி யின் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந் தன் 2014 ஆகஸ்டில் நாடாளுமன்றத்தில் பேசிய பொழுது தனது கண்டனத்தையும் அதிருப்தியை யும் தெரிவித்தார்.

இந்து மத இடங்களை இலங்கை அரசாங் கத்தை சேர்ந்தவர்கள் இடித்தும், நாசப்படுத்தியும் வருகின்றார்கள் என்றும் இது சம்பந்தமாக அர சாங்கத்திற்கு பல முறை கூறியதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல புதிய புதிய பௌத்த மத வழிபாட்டு இடங்கள் திடீர் திடீர் என முளைப் பதாக அவர் சுட்டிக் காட் டினார். கௌதம புத்த ரின் சிலையை எங்கே வைத்தாலும் தனக்கு அக்கறை இல்லை. ஆனால் பௌத்தர்கள் ஒருவர் கூட இல்லாத இடங்களில் எல்லாம் பௌத்த சிலைகள் வைக் கிறார்கள்.

மேலும் அவர் குறிப் பிடுகையில் இந்து கலா சாரம் சம்பந்தப்பட்ட பல இடங்களை பலவந்தமாக அரசும், அரசின் அடிவருடிகளும் கைப்பற்றுகிறார் கள். இது வருத்தத்தை தரும் ஒரு விடயமாகும் என அவர் நாடாளுமன்றத்தில் அன்று சுட்டிக் காட்டி னார்.

திருகோணமலையில் கன்னியா என்ற இடம் உள்ளது. அங்கே 7 வெந்நீர் கிணறுகள் உள்ளன. இது வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள இடமாகும்.



இராவணன் ஒரு வரலாற்று நாயகன் அவன் அந்தக் காலத்தில் திருகோணமலையில் உள்ள திருகோணேஸ்வரர் கோயிலுக்கு சென்றதாக வர லாறுகள் கூறுகின்றன. கோணேஸ்வர் கோயில் புராணங்களில் தக்ஷணகைலாயம் என அழைக் கப்பட்டது. அதாவது சிவன் வாழும் தென் பகுதி கைலாசம் என்று கூறினர்.

அந்த கிணறும் அதை சுற்றி உள்ள பகுதிகளும் சிங்கள மயமாக்கப்பட்டு வருகின்றன என இரா. சம்பந்தன் நாடாளுமன்றத்தில் விசனத்துடன் சுட் டிக் காட்டினார்.


திருகோணமலை பட்டினமும், சுழலும் பிரதேச சபை வெந்நீர் ஊற்று சம்பந்தமாக ஒரு பெரிய விளம்பரப் பலகை அங்கே வைத்துள்ளார்கள். அதிலே மூன்று மொழிகளிலும் - தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கன்னியாவின் வர லாற்றை தெளிவாக வெளியிட்டுள்ளார்கள்.

அந்த கன்னியா வெந்நீர் ஊற்று வரலாறு தமிழில் உள்ள விபரம் கீழே தரப்படுகிறது வருமாறு:

இராவணன் வழிபடுவதற்கு லிங்கத்தை பெற்று செல்வதற்காக கோணேசர் பெருமானை நினைத்து கோணேஸ்வரத்தில் இருந்து தவம் செய்தான். கோணேஸ்வர பெருமான் திருகாட்சி கொடுக்காத தால் ஏமாற்றம் அடைந்து, கடும் சினம் கொண்டு கோணேச மலையை தன் வாளால் வெட்டி எடுத்து செல்ல முயற்சித்தான்.

அவன் மலையை வெட்டி அசைத்த போது இறைவன் தன் காற் பெருவிரலால் அமிழ்த்த இராவணன் மலையின் கீழ் அகப்பட்டு விட்டான். இந்த செய்தியை அறிந்த அவனுடைய தாயானவள் தனது மைந்தன் இறந்து விட்டான் என்று நினைத்து மனத்துயரினால் இறந்துவிட்டார்.

இராவணன் அகந்தை ஒழிந்து இறைவனை நினைத்து சாமகீதம் பாடி திருவருளுக்கு பாத்திரமா னான். இறைவனிடம் இருந்து வீரவாளையும், நீண்ட ஆயுளையும் பெற்ற இராவணன், தனது தாயார் இறந்த செய்தியை அறிந்து கவலை அடைந்து தயாருக்கு அந்தியேட்டி செய்வதற்கு வாளால் குத்தி நீர் ஊற்றை வர வைத்தான். அவன் குத்திய 7 இடங்களில் இருந்து 7 வெந்நீர் ஊற்று சுரந்து வெளிப்பட்டன. இவைகளே கன் னியா வெந்நீர் ஊற்றுகள் என புராணங்கள் ஆதாரப்படுத்துகின்றன.



இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஜூலை 09, 2016 அன்று வெளியிடப்பட்டது.